Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

வாசன் உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்–2 மதுரை

ஈழநாடு

EELA NADU
National TAMIL DAILY

போன் 389 தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 3 யாழ்ப்பாணம் பிலவ ஐப்பசி 3 ஆம் நாள் ஜ. அவ்வல் 8 (19-10-61) வியாழக்கிழமை இதழ் 212

# புதிய செனட்டர் மாணிக்கம் தெரிவு

## தமிழரசு எம்.பி. க்கள் ஏகமனதாக முடிவு

### உடுப்பிட்டி, வவனியா, பொத்துவில் ஆதரவு

கொழும்பு, புதன்

மட்டக்களப்பைச் சேர்ந்த முன்னுள் கூட்டுறவுக் கமிஷனர் திரு. எம். மாணிக்கம் புதிய செனட்டராவார். தடை செய்யப்யட்டுள்ள தமிழரசுக் கட்சியின் அங்கத்தவர்கள் இன்று பார்லிமெண்ட் கமிட்டி அறையில் கூடி செனட்டர் பதவிக்கு திரு. மாணிக்கத்தையே தங்கள் அபேட்சகராக நிறுத்துவதென ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

தமிழரசுக் கட்சியினர் செனட்டர் பதவிக்கு அபேட்சகராக நிறுத்தும் எவரையும் ஆதரிப்பதாக உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம், வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் ஆகியோரும், பொத்துவில் ஜனுப். எம். பி. ஜனுப் எம. மஜீத், நிந்தவூர் எம். பி. எம. எஸ். எம். மஜீத் ஆகியோரும் அறிவித்துள்ளனர்.

### 24-ம திகதி தேர்தல்

தற்பொழுதிருக்கும் செனட்டர்களின் 5 வருடபதவிக்காலம் முடிவுறுவதால் புதிய செனட்டர்களுக்கான மனுப்பத்திரங்களை சபாநாயகர் கோருவார்.

நாளை பார்லிமெண்ட் சபை கூடும்போது சபாநாயகர் இது பற்றி அறிவிப்பார்.

5 பேருக்கு மேற்பட்டவர்கள் மனுப்பத்திரங்கள் சமர்ப்பித்தால் அடுத்த செவ்வாய்க் கிழமை செனட்டர்கள் தெரிவுக்கான தேர்தல்நடைபெறும். 5 பேர் மட்டுமே மனுப்பத்திரங்கள் சமர்ப்பித்திருந்தால் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்

அரசாங்க பார்லிமெண்ட் குழு நாளை கூடும்போது இது பற்றியும் விவாதிக்கும்.

## தமிழர் வாழ்வில் புது திருப்பம்

### புசல்லாவையில் உடுப்பிட்டி எம். பி.

புசல்லாவை, செவ்வாய்

"இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கையில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தலைவர்களும் மலைநாட்டுத் தமிழ் மக்களும் ஒன்று சேர்ந்துள்ளனர். தங்கள் பண்பை, மொழியை, இனத்தைப் பேணி வளர்க்க முன்வந்துள்ளனர். எனவே 25 லட்சம் மக்களின் கோரிக்கைகள் நிச்சயம் இனி நிறைவேறிவிடும்."

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி திரு. எம். சிவசிதம்பரம் புசல்லாவை நகரசபை மைதானத்தில், இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற கலாசார மகாநாட்டில் பேசுகையில் கூறினர்.

தி. மு. கழகத்தின் புசல்லாவை மாவட்டக் கிளையின் சார்பில் நடைபெற்ற இந்த மகாநாடு திரு. எம். ஏ. செல்லமுத்து தலைமையில் நடைபெற்றது. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், திரு. எம். திருச்செல்வம், திரு. எம் மாணிக்கம், குமாரி கலாமாணிக்கம் ஆகியோரும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:–

#### தமிழ் மக்களனைவரும் ஒரே மக்கள் தான்

மலைநாட்டுத் தமிழர்களும் வடக்கு கிழக்கு மாகாணத் தமிழர்களும் வேறுபட்டவர்களல்ல. உலகில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் தமிழ்த் தாயின் மக்கள் தான் என்பதை எல்லோரும் உணர வேண்டும்.

#### சிறந்த கல்வி அளிக்க வேண்டும்

இந்நாட்டின் பொருளாதார வளத்துக்காக உழைக்கும் மலைநாட்டு மக்களுக்கு வாக்குரிமையில்லை. எவ்விதமான இன்னல்கள் வந்தாலும் நாம் அனைவரும் இலங்கையர்களே! தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குச் சிறந்த கல்வி வசதியில்லை. தோட்ட ஆசிரியர்களுக்கு நியாயமான சம்பளம் வழங்கப்படவில்லை. எனினும் தமிழர்களுக்கு செய்யும் புனித சேவையாகக் கருதி தொழிலாளர்களின் பிள்ளைக

(5ம்பக்கம் பார்க்க)

## புதிய கல்விக்கொள்கையை மறுக்கமாட்டார்கள்

### அரசியல் வெறுப்பு இல்லையானல்!

### திரு. சோமசேகர கருத்து

யாழ்ப்பாணம், வியாழன்

"அரசியல் பிரச்சினை காரணமாக எமது மனதில் வெறுப்பு இல்லையானல், பிள்ளைகளின் கல்வி அரசாங்கம்திடமே இருக்கவேண்டுமென்ற கொள்கையை எவரும் மறுக்கமாட்டார்கள்" என்று வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. சோமசேகரம் யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

திரு. சோமசேகரம் மேலும் பேசுகையில் புதிய கல்வித் திட்டம் பற்றியும் கல்வித் திட்டத்தில் இப்பொழுது ஏற்பட்டு வரும் மாற்றம் பற்றியும் விரிவாக எடுத்து விளக்கினர்.

"கல்வித்திட்ட மாற்றத்தில் குறிப்பிடக் கூடிய மற்ருெரு முக்கிய அம்சம் எந்தப் பாடசாலையிலும் எந்தப் பிள்ளையும் தமது மதக் கல்விபெற முடியும் என்ற ஷரத்து கடந்த காலத்தில் ஐம்பது சதவிகிதத்துக்கு அதிகமான பிள்ளைகள் வீட்டில் ஒரு சமயச் சூழலிலும் பாடசாலைகளில் மற்ருெரு சமயச் சூழலிலும் வாழ்ந்து வந்துள்ளனர். இது நாஸ்திகம் வளரவும் சமய நம்பிக்கை குறையவும் வழி வகுத்து விட்டது" என்று திரு. சோமசேகரம் மேலும் கூறினர்.

"ஒரு பாடசாலையிலேயே பல்வேறு சமயக்கல்வியும் அளிக்கக் கூடிய புதிய முறையினல் இலங்கையிலுள்ள நான்கு முக்கிய சமயங்களான பௌத்தம், இந்துமதம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியவைகளுக் கிடையில் பஸ்பர மதிப்பும் சகிப்புத்தன்மையும் வளர வாய்ப்பு உண்டு என நம்புவோம்" என்று உதவி வித்தியாதிபதி தெரிவித்தார்.

புதிய கல்வித்திட்டத்தினல் ஏற்பட்ட மற்ருெரு முக்கிய மாறுதல் ஆசிரியர்கள் தெரிவு

5–ம் பக்கம் பார்க்க)

## வல்வெட்டி கொலை வழக்கு முடிவு

யாழ்ப்பாணம், வியாழன்

வல்வெட்டியைச் சேர்ந்த ஆறுமுகம் செல்லத்துரையைக் கொலை செய்ததாக அவரது உறவினரான சின்னத்தம்பி செல்லத்துரைமீது குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா எதிரியை இரு வருட காலம் புறபேசன் நன்னடத்தையிலிருக்க உத்தரவிட்டார்.

வட பகுதி அசைஸ் கோர்ட்டில் ஏற்கனவே இவ்வழக்கு விசாரணை முடிவடைந்ததாயினும் எதிரியைப்பற்றிய அறிக்கையொன்ற புறபேசன் இலாகா அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளும் முகமாக புதன் கிழமைவரை தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டது.

நீதியரசர் தீர்ப்புக் கூறுகையில் எதிரியை நோக்கி உன்னுடைய வழக்கறிஞரின் புத்திமதியை ஏற்று நீ கைமோசக் கொலை புரிந்த குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டாய். நீ ஒரு அதிர்ஷ்டசாலியாகும் என்று குறிப்பிட்டார்.

முடிக்குரிய தரப்பில் வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரனும், எதிரி தரப்பில் திரு. கே இரத்தினசிங்கம், திரு. என். நடராசா ஆகியோரின் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கமும் ஆஜராயினர்.

நல்லூர் பயிற்சிக் கலாசாலை, சாதனபாடசாலை:

## அரசாங்கம் நேற்று பொறுப்பேற்றது

### சகல மத மாணவர்களுக்கும் அனுமதி

### அதிபர் விடுதிக்கு மறுப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையையும் சாதன பாடசாலையையும் நேற்று அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது. அரசாங்கத்தின் சார்பில் வடபகுதி உதவிவித்தியாபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் இப்பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார்.

ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேராத மற்றைய கிறீஸ்தவர்களைக் கொண்ட திருச்சபையினல் நிர்வகிக்கப்பட்டு வந்த இக்கலாசாலை அரசாங்கத்தாரால் போதிய அறிவித்தல் அரசாங்க வர்த்தமானி மூலம் கொடுக்கப்பட்டு நேற்று எடுக்கப்பட்டது. சென்ற வருடத்தில் மாணவர் தொகை போதாமையால் ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த பெண்கள் சிலர் பயிற்சிக் கலாசாலைக்கு அனுமதிக்கப்பட்டார்கள் இதற்குமுன் ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்களும் அனுமதிக்கப்பட்டதில்லை.

இக்கலாசாலையில் அரசாங்கம் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து இனிமேல் சகல மதத்தைச் சேர்ந்த மாணவர்களும் ஆசிரிய பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவார்கள்.

இதோடு சம்பந்தப்பட்ட சாதன பாடசாலையும் நேற்று அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது.

இங்கிருக்கும் கிறீஸ்தவ கோவிலுடன் இணைந்திருக்கும் அதிபரின் விடுதியை அரசாங்கம் எடுக்கக்கூடாதென எதிர்ப்புக் காட்டப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சட்ட நடவடிக்கை மூலம் இதனை எடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட விருப்பதாகத் தெரிகிறது.

---

## அனந்தசயனம் ஆந்திராவில் போட்டியிடுவார்

ஹைதராபாத், செவ்வாய்

பொதுத் தேர்தல்களில் லோகசபைக்கு ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் தேர்தல் கமிட்டியால் ஏகமனதாக சிபார்சு செய்யப்பட்டுள்ள 26 அபேட்சகர்களில் லோகசபை சபாநாயகர் ஸ்ரீ எம். அனந்தசயனம் அய்யங்காரும் ஒருவர்.

ஸ்ரீ அய்யங்காருக்கு சித்தூர் தொகுதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்ற தடவை அவர் சித்தூர் தொகுதியிலிருந்து தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

1 சிறி2597 இலக்கம்கொண்ட போர்ட் பிரிபெக்ட் கார் விற்பனைக்குள்ளது. சொந்தக்காரரே பாவித்தவர். நல்ல நிலையிலுள்ளது. குறைந்தமைல்களே சேவை செய்துள்ளது. வேலணையில் பார்வையிடலாம். கே. பொன்னம்பலம், பொது சுகாதார இன்ஸ்பெக்டர். வேலணை.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் கிரிநீவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**தேவை**

அரசாங்கத்திற் பதிவு செய்யப்பட்ட பண உதவி ஸ்தாபனத்திற்குப் பிரதிநிதிகள் தேவை. தகுந்த சம்பளம். விபரங்களுக்குப் பத்துச் சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். சி. எஸ். பரமேஸ்வரன், நாகேந்திரா மடத்தடி, வடக்கு அராலி, வட்டுக்கோட்டை.

உ
கடவுள் துணை

**அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்கம் நல்லூர்**

தொண்டர்படைக் காரியாலயம்,
204, பருத்தித்துறை றேட்,
நல்லூர்.

கிளைக் காரியாலயம்:
128, பருத்தித்துறை றேட்,
ஆனைப்பந்தி.

## சைவசமயப்பிரசாரம்

நல்லூர் ஸ்ரீ முருகன் தேவஸ்தான அதிபரின் அனுமதியுடன் மேற்படி ஆலயத் திருக்குள மண்டபத்தில் நிகழும்பிலவருஷ ஐப்பசி மீ 3-ந்வ (19-10-61) வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் மேற்படி சங்க ஆதரவில் நல்லூர் தேவஸ்தான சமயப் பிரசாரகரும் எமது சங்கப் பிரசாரத் தலைவருமாகிய முத்தமிழ்மணி வி. எஸ். எஸ். மணிபாகவதர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும். அவ்வமயம் சைவ பரிபாலனச் சபைப் பிரசாரகர் திரு. எம். மயில்வாகனம், திரு. பொ. அப்புக்குட்டி ஆகியோர் பிரசாரஞ் செய்வார்கள். தொடர்ந்து ஒவ்வோர் வெள்ளிக்கிழமைகளிலும் சாயந்தரம் 4 மணிக்கு நடைபெறும் சமயப் பிரசாரங்களில் பெண்மணிகளும் பங்குபற்றுவார்கள். பின்னர் பேச்சுப் போட்டியும் நடைபெறும். ஆகையால் ஒவ்வோர்பிரசாரத்திற்கும்மாணவமாணவிகளையும் பங்கு பற்றும் படிவேண்டிக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
த. இராசரத்தினம்
காரியதரிசி.

**தேவை**

பதிவு செய்யப்பட்ட பெனிவிற் சொசைற்றியில் மனேஜராகக் கடமையாற்ற ஒருவர் தேவை. பிணைப்பணம் ரூபா 1000ம் கட்ட வேண்டும். வேதனம் 90—150 ம் கொமிஷனும் கொடுக்கப்படும். நேர்மையும், நிர்வாகத் திறமையுமுள்ள ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். நிர்வாகக் காரியதரிசி, த. இந்தோ சிலோன் பெனிவிற் சொசைற்றி லிமிட்டெட், இல. 513, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.

72—12


# "நல்லவிதைகளுடன் நல்ல சிந்தனைகளையும் விதைக்கவேண்டும்"

## உணவுஉற்பத்திஓவர்சியர்களுக்கு பட்டிருப்பு எம். பி. யோசனை

மட்டக்களப்பு, செவ்வாய் "தொழிற்சங்கக் கூட்டத்தில் தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் ஒரே மேடையில் வீற்றிருப்பது மகிழ்ச்சிதரும் அறிகுறி" என்று பட்டிருப்புப் பிரதிநிதியும் தமிழரசுக் கட்சித் தலைவருமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் உணவு உற்பத்தி ஓவர்சியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. வி. ராசதுரை, திரு. எம். மஜீத், தாய்ச்சங்கத்தைச் சேர்ந்த திரு. ரூபன் பத்திராஜ ஆகியோர் மேடையில் அமர்ந்திருந்தனர். திரு. இராசமாணிக்கம் மேலும் கூறியதாவது:-

உணவு உற்பத்தி ஓவர்சியர்களான நீங்கள் நல்ல விதைகளை விதைப்பதிலும் பயிர்கள் செழிப்புடன் வளர்ச்சியடைவதிலும் கவனம் செலுத்தும் பணியிலுள்ளவர்கள் நல்ல விதைகளை விதைப்பதில்மட்டுமல்ல சிங்கள, தமிழ், முஸ்லிம் பகுதிகளில் நீங்கள் மக்கள் மனதிலும் நல்ல சிந்தனைகளையும் விதைக்கவேண்டும். நல்ல விதைகளுடன் நல்ல சிந்தனைகளையும் மக்கள் மனதில் விதைப்பதில்தான் நாட்டின் பொருளாதார சுபிட்சம் தங்கியுள்ளது. இங்கு குழுமியுள்ள எங்கள் சிங்கள சகோதரர்கள் தங்கள் பகுதிக்குத் திரும்பிச் சென்றதும் மக்கள் மனதில் நல்ல சிந்தனையையும் இலட்சியத்தையும் விதைப்பார்களென்று நம்புகிறேன். நல்ல சிந்தனைகள்தான் நாட்டின் நல்ல பெயரையும் நாட்டின் முன்னேற்றத்தையும் வளர்ச்சியுறச் செய்யும்.

**அரசியல் பேச முடியாது**

அரசியல் சம்பந்தப்பட்ட விஷயங்களை நான் பேச முடியாதிருப்பதற்கு வருந்துகிறேன்.

திரு. இராசதுரை பேசுகையில் ஒவ்வொரு மனிதனும் தனது சொந்த முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருப்பதுதான் தீமைகளுக்குக் காரணமென்றார்.

"தொழிற் சங்கங்கள் தங்கள் சொந்த நலனை மட்டும் கருதி உழைக்காமல் சமுதாயத்தின் நலனுக்காகவும் உழைக்கவேண்டும்" என்று திரு. இராசதுரைகேட்டுக் கொண்டார்.

ஜனாப் எம். மஜீத் பேசுகையில் உத்தியோகத்தர்களின் இடமாற்றத்தைக் கவனிப்பதுதான் எம். பி.க்களின் கடமையென்றும், மக்கள் கருதுவதால் எம். பி.க்கள் உண்மையான சேவை செய்யத் தடையாக இருக்கிறதென்றார்.

## கள்ளக் குடியேற்ற தரகர் 80 பேர் கைது

சென்னை, அக். 71

இலங்கைக்குக் கள்ளத்தனமாக, குடியேறுவதைத் தடுக்க 1961 ஜூலை மாதத்தில் விசேஷ பொலிசாரும், தல பொலிசாரும் குடியேற்றக் கட்டுப்பாட்டுத் துறையினரும் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஜூலை மாதத்தில் 17 தடவைகள் சோதனைகள் நடத்தப்பட்டன. கள்ளக் குடியேற்ற நபர்கள் 15 பேரும், தரகர்கள் ஏஜண்டுகள் 18 பேரும் பிடிபட்டனர். இலங்கை அரசாங்கத்தாரால் திருப்பி அனுப்பப்பட்ட 113 பேர் தனுஷ்கோடி வந்துசேர்ந்தனர். அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் 5 தரகர்கள் பிடிபட்டனர். அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டது.

ஜூலை மாதத்தில் 80 தரகர்களும், ஏஜண்டுகளும் தண்டிக்கப்பட்டனர். அவர்களுக்குத் தலா ரூ. 5 லிருந்து ரூ. 250 வரை அபராதம் விதிக்கப்பட்டது. 15 கள்ளக் குடியேற்ற நபர்கள் தண்டிக்கப்பட்டனர். அவர்களுக்கு ரூ. 5 லிருந்து 250 வரை அபராதம் விதிக்கப்பட்டது.

## நேரசூசி நிபுணர்களினல் தயாரிக்கப்படுவது நல்லது

### விசாரணைக்குழுமுன் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன் "நேரசூசி தயாரிப்பதில் இ. போ. ச. போதிய கவனம் செலுத்துவதில்லை. எந்த எந்த இடங்களிலிருந்து அதிக பிரயாணிகள் பிரயாணம் செய்கிறார்களென்பதை அறிந்து அதற்குத் தகுந்தாற்போல் நேரசூசி தயாரிக்கப்படல் வேண்டும். அப்பொழுதுதான் பொது மக்கள் விழுந்தடித்துக்கொண்டு செல்லாமல் வசதியாகச்செல்ல வாய்ப்பாக இருக்கும். இவ்விதம் சில இடங்களில் பொது மக்கள் பஸ்ஸுக்காக அதிக நேரம் காத்திருக்கவேண்டி நேரிடுவதாலேயே அவர்கள் பஸ்களை விடுத்து மோட்டார் வான்களில் செல்லுகின்றார்கள். இதனல் இ. போ. ச. நஷ்டமடைகிறது. எனவே நிபுணர்களைக்கொண்டு இந்த நேரஅட்டவணையைத் தயாரித்தல் நல்லதாகும்."

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இ. போ. ச. விசாரணைக்குழுமுன் சாட்சியமளித்த திரு. எஸ். சிவத்திலிங்கம் கூறினர். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எந்தக் காரணத்தைக் கொண்டும் குறிப்பிட்ட அளவுக்கு மேற்பட்ட பிரயாணிகளை பஸ்ஸில் ஏற்றிச்செல்ல அனுமதியளிக்கக்கூடாது.

இங்கு குறிப்பிட்ட தூரமுள்ள ஓர் இடத்துக்கு சில பஸ்களில் செல்வதற்கு ஒரு கட்டணமும் வேறுசில பஸ்களில் வேறுகட்டணமும் வசூலிக்கப்படுகிறது. இவ்வித மாறுபட்ட கட்டணங்களால் ஏழை மக்கள் சில சமயங்களில் பெரிதும் அவதிக்குள்ளாகின்றனர்.

இ. போ. ச. ஊழியர்கள் தங்குவதற்குப் போதியவசதியளிக்கப்படுவதில்லை. இன்னும் சிறு சிறு குற்றங்களுக்காக அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இச்சூழல் அவர்கள் தமதுகடமையை உற்சாகத்தோடு செய்யமுடியாதிருக்கிறது.

# 'மக்களின் மதிப்பைபெற்றவர்கள் நேர்மையுடன் நடக்கவேண்டும்'

## வரியிறுப்போர் சங்கத்தில் சாவகச்சேரி எம். பி. பேச்சு

யாழ்ப்பாணம், புதன் "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார். மாணிவாசப்பெருமான் அருளிய மணிவாக்குகள் என்றுமே குன்றாது விளங்குகின்றன. அதிற் கூறப்பட்டுள்ள இலட்சியங்கள் உலக வாழ்க்கையோடும் ஒத்திருக்கின்றன. அறிவு குறைந்த விலங்குகள் கூட இதற்குச் செவி சாய்ப்பது என்றால் அதன் பெருமையை அளவிடமுடியுமா? ஆகவே, மக்களாகிய நாம் அதன் அருமையை அறிந்து பயன் பெற வேண்டும் 'வாழ்த்த வாயும், நினைக்க நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் நமக்குக் கிடைத்தது இறைவனைத் தொழுது அவன் அருளைப் பெறுதற்கேயாம். 'நீள நினைந்தடியேன்' என்ற அருள்வாக்கைச் சிந்தித்தால் உண்மை புலனாகும்"

இவ்வாறு வண்ணை நவலர் வித்தியாசாலையில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் 'திருவாசகம்' என்னும் பொருள் பற்றிப் பேசிய திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைப் பேராசிரியர் திரு. நா ஞானசம்பந்தன் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாநகரசபை முன்னள் உதவி மேயர் திரு. சோ. இராசரத்தினம் பேசுகையில் "தமிழும் சைவமும் தழைத்தோங்கும் பொருட்டு நாவலர் பெருமான் ஸ்தாபித்த இவ் வித்தியாசாலை சைவ நெறிகளை பரவச்செய்து பாதுகாக்கும் பெரும்பணியில் முன்னின்று உழைத்து வருவதுபோல் வருங்காலத்திலும் இவ்வகையான முயற்சிகளைத் தொடர்ந்தும் செய்யுமென நம்பலாம். அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பெடுத்தாலும் சமயச் சார்பான விஷயங்கள் நடைபெற்று வரும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றது. நமது கலை, கலாச்சாரம் முதலியவற்றைப் பாதுகாக்கும் பணிகளில் பாடசாலைகள் முன்னின்றுழைக்க வேண்டியதும் அவசியமாகும்" என்றார்.

பெற்றோர் ஆசிரியர் சங்க உபதலைவர் திரு நா. சுப்பிரமணியம், தலைமையாசிரியர் பண்டிதர் இ. திருநாவுக்கரசு, திரு. சி. முத்துத்தம்பி ஆகியோரும் பேசினர்கள்.

நாதஸ்வரக்கச்சேரியும், திரு க. சித்திரவேலின் பக்திபாடல் நிகழ்ச்சிகளும், மாணவர்களின் கலாநிகழ்ச்சிகளும் சிறப்பாக அமைந்திருந்தன.


10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொ
ல
ர்

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே !
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில் நவீன முறையில் செய்யப்படுவது !

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினியம் இன்டஸ்ரீஸ்லிமி.,
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்
J.D. 3.

# 5 கோடி தொன் குண்டு பரீட்சை வேண்டாம்

## ரஷ்யாவுக்கு அமெரிக்கா கோரிக்கை

### "10 கோடி தொன் குண்டும் எங்களிடம் உண்டு"

—திரு. குருஷ்சேவ்

வாஷிங்டன், அக். 18

இம்மாதமுடிவில் ஐந்து கோடி தொன் எடையுள்ள அணுகுண்டை வெடிப்பதுடன் குண்டுப் பரீட்சைத் தொடரை முடித்துவிடப் போவதாக சோவியத் பிரதமர் குருஷ்சேவ் நேற்று அறிவித்ததற்கு அமெரிக்க அரசாங்கம் அந்தக் குண்டை வெடிக்க வேண்டாம் என்று ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது.

"ஏற்கனவே பரீட்சை செய்யப்பட்ட குண்டுகளினால் கதிரியக்கம் பரவியுள்ளது. இந்த பெரிய குண்டையும் வெடித்து பரீட்சை செய்தால் கதிரியக்கம் பெருமளவில் பரவி பெருந் தொகையான மக்களுக்கு அபாயத்தை உண்டு பண்ணும்" என்று அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகையிலிருந்து விடுக்கப்பட்ட அறிக்கை கூறுகிறது.

இராணுவ நடவடிக்கைக்கு இது போன்ற சக்தி வாய்ந்த ஒரு பெரிய குண்டு பரிசோதனை செய்து பார்க்க வேண்டிய அவசியமில்லையென்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இந்தக் குண்டுப் பரீட்சையை நிறுத்தும்படி சோவியத் யூனியனை நாங்கள் கோரும் பொழுது எங்கள் கோரிக்கையை உலக மக்களும் ஆதரிப்பார்களென்பது எங்கள் நம்பிக்கை என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

நேற்று மாஸ்கோவில் கிரம்ளின் மாளிகையில் ஆரம்பமான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 22வது மகாநாட்டில் திரு. குருஷ்சேவ் தலைமையுரை நிகழ்த்துகையில் குண்டுப் பரீட்சைகள் பற்றிக் குறிப்பிட்டார். இப்பொழுது நடைபெற்று வரும் பரீட்சைகள் இம்மாத முடிவில் 5 கோடி மீகா தொ[ன்] எடையுள்ள குண்டு வெடித்துப பரீட்சை செய்வதுடன் நிறுத்தப்பட்டு விடுமென அவர் அறிவித்தார்.

"எங்களிடம் 10 கோடி மீகா தொன் எடையுள்ள குண்டும் இருக்கிறது. ஆனால் நாங்கள் அதைப் பரீட்சை செய்து பார்க்கமாட்டோம். ஏனெனில் அது எங்களையுமே பாதிக்கக்கூடும்" என்று திரு. குருஷ்சேவ் கூறினார்.

பரீட்சை செய்வதென உத்தேசிக்கப்பட்டுள்ள ஐந்து கோடி தொன் ஹைட்ரஜன் குண்டு, சென்ற உலகமகா யுத்தத்தின் போது ஹிரோஷிமாவில் போடப்பட்ட குண்டைவிட இரண்டாயிரத்து ஐநூறு தடவை அதிக சக்தி வாய்ந்தது எனத் தெரிகிறது.

## தென் வியட்நாம் வெள்ளம்

### அமெரிக்கா உதவி

வாஷிங்டன், அக். 18

தென்வியட்நாமில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் நூற்றுக் கணக்காது மக்கள் மாண்டதாகவும் நெற்பயிர்கள் பெருமளவு சேதமடைந்துவிட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி அளிக்கும் முகமாக 45 லட்சம் தொன் உணவுப் பொருள்களை அமெரிக்கா அனுப்பியுள்ளது.

## அதிகாரிகளுடன் நாஸர் ஆலோசனை

கெய்ரோ, அக். 18

ஐக்கிய அரபுக் குடியரசிலிருந்து சிரியா தனியாகப் பிரிந்து சென்றதன் விளைவாக ஐக்கிய அரபுக் குடியரசு (எகிப்து) மந்திரி சபையில் தாம் மாற்றங்கள் செய்யப் போவதாக ஜனாதிபதி நாஸர் அறிவித்திருந்தார். இது சம்பந்தமாக எகிப்து அரசாங்கத்தின் உயர்தர அதிகாரிகளுடன் ஜனாதிபதி நாஸர் ஆலோசனை நடத்தினார்.

## தேசிய அபிவிருத்தி வரி; புனராலோசனைக்கு மந்திரி மறுப்பு

கொழும்பு, புதன்

தேசிய அபிவிருத்தி வரியை புனராலோசனை செய்ய நிதி மந்திரி பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா மறுத்துவிட்டார். தேசிய அபிவிருத்தி வரி பற்றி புனராலோசனை செய்யுமாறு 200 தொழிற்சங்கங்களுக்குப் பிரதிநிதித்துவமளிக்கும் தொழிற் சங்கங்களின் கூட்டு ஆலோசனைக் கமிட்டி தூதுக் குழுவொன்று நேற்று நிதிமந்திரியைச் சந்தித்துக் கேட்டுக்கொண்டது.

வருமானத்தில் துண்டு போடப்படுவதாக இருந்தால் அபிவிருத்தித் திட்டங்களிலும் துண்டு போடவேண்டி நேரிடும் என்று திரு. பாண்டாரநாயக்கா தெரிவித்தார்.

இப்பொழுது செய்யப்படு தியாகம் எதுவும் நாட்டின் நலனுக்குத் தான் என்பதை மனதில் கொள்ளவேண்டுமென்றும் நிதிமந்திரி கூறினர்.

## பாக்- ஆப்கான் தகராறு

### அமெரிக்கா மத்தியஸ்தம்

வாஷிங்டன், அக். 18

பாக்கிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்குமுள்ள தகராறுகளைத் தீர்த்து வைக்க அமெரிக்க மத்தியஸ்தராகப் பணி புரிவதற்கு பாக்கிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் ஒப்புக் கொண்டுள்ளன.

இரு நாடுகளுக்குமிடையில் பட்டூணிஸ்தான் சம்பந்தமாக ஏற்பட்ட தகராறு இருநாடுகளுக்குமிடையிலிருந்து வந்த ராஜீய உறவுகளைத் துண்டிக்கச் செய்துவிட்டது.

இரு நாடுகளுக்குமிடையிலுள்ள தகராறுகளை சமாதானமான முறையில் தீர்த்து சமரச முயற்சியை மேற்கொள்ள கனடாவில் அமெரிக்க தூதுவராகவுள்ள திரு. லிவிங்ஸ்டன் மேர்ச்சன்ட் என்பவரை அமெரிக்க ஜனாதிபதி கென்னடி நியமித்துள்ளார்.

## உலக சந்தைக்கு உகந்த உற்பத்திப் பொருள் அவசியம்

### விசேஷ கமிட்டி கருத்து

கொழும்பு, புதன்

இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு காணி விவசாய நீர்ப்பாசன இலாகா அமைச்சர் திரு. சி. பி. டி' சில்வா ஒரு விசேஷ கமிட்டியை நியமித்திருந்தார். ஏற்றுமதிப் பொருள்களை ஆராய்ந்ததன் பேரில் குறித்த கமிட்டி சில புதிய செய்கைப் பொருள்கள் பயிரிடப்பட வேண்டும் எனச் சிபார்சு செய்துள்ளது. உலக சந்தையில் அதிக கிராக்கி உள்ளபொருள்கள் சிலவற்றை ஏற்றுமதிக்கென இங்கு பயிரிடவேண்டும் என்பது விசேஷ கமிட்டியின் கருத்து.

விசேஷ கமிட்டிக்குத் தேயிலை, ரப்பர் கமிஷனர் திரு. பி. மகாதேவா தலைவராக இருந்தார். இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்கள் பலதரப்படுத்தப்பட வேண்டும் எனவும், அதிக விலைமதிப்பும் கிராக்கியுமுள்ள பயிர்களை பயிரிட வேண்டும் எனவும் இதுபற்றி அரசாங்கம் ஆராய்சி செய்து கவனம் எடுக்க வேண்டும் எனவும் கமிட்டி அறிக்கை கூறுகிறது.

வழக்மான தேயிலை, ரப்பர், தென்னை ஆகிய விலைபொருள் பயிர்களோடு லாபமளிக்கக்கூடிய விலைபொருள் பயிர்களும் பயிரிடவேண்டும் என்பது இவர்கள் கருத்து.

தென் அமெரிக்க நாடுகள் சிலவும் ஆபிரிக்கநாடுகளுமே சில பொருள்களை இப்போது வெளிநாட்டுச் சந்தைகளுக்கு உதவி வருகின்றன.

'ஒலிவ்' எனப்படும் சீமை இலுப்பை மரத்தை இங்கு பயிரிடலாம் எனக் கமிட்டி கூறியுள்ளது. ஆபிரிக்கா, மலாயா ஆகிய தேசங்களில் இது பயிரிடப்பட்டு வருகின்றது. இலங்கையில் தென்னை வளர்ச்சிக்கு வாய்ப்பில்லாத இடங்களில் 'ஒலிவ்' பயிரிடலாமாம்.

இலங்கையில் இப்போது காணி அபிவிருத்திக்கென வருடாந்தம் 50,000,000 ரூபாய் செலவாகி வருகிறது. காணிக் கமிஷனரின் கண்காணிப்பின் கீழ் சாணி உபயோகப் பகுதியொன்றை நியமிக்க வேண்டும் எனக் கமிட்டி ஆலோசனை கூறியுள்ளது. இந்தப் பகுதி எவ்வாறுநிலத்திலிருந்து அதிக பிரயோசனம் பெற்றுக் கொள்ளலாம் என்பது பற்றி காணிக் கமிஷனருக்கு எடுத்துக் கூறவேண்டும் என்பது கமிட்டியின் நோக்கமாகும்.

## பென்ஷன் உரிமை கிடைக்கும்

கொழும்பு, புதன்

முன்னை நாள் அரசாங்க சேவையிலிருந்த மூவருக்குப் பென்ஷன் உரிமை வழங்குவதற்கு, நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, பார்லிமெண்டின் அங்கீகரத்தை வெகு விரைவில் பெற்றுக்கொள்ளவிருக்கிறார். கீழ் வரும் மூவருக்குமே பென்ஷன் உரிமை கோரப்படுகின்றது.

உணவு வர்த்தக கப்பல் மந்தி திரு. டி.பி. இலங்கரத்ன., முன்னை நாள் கொழும்பு எம். பி. திரு. எம். எஸ். தேமிஸ், திரு. ஏ. ஆர். ஆசீர்வாதம்.

## தகுதியான இலங்கையர் இல்லை!

### டி. ஆர். பி. மனுபற்றி விளக்கம்

கொழும்பு, புதன்

முக்கிய பதவிகளில் உள்ள இலங்கையரல்லாதவர்களுக்குப் பதிலாக இலங்கையர்கள் இடம் பெறுவதற்குத் தகுதியான இலங்கையர்கள் இல்லாததும், தகுதியான தராதரத்தைப் பெறுவதற்கு இலங்கையர் பயிற்சி பெறத் தவறியதும் தான் சென்ற வருடத்தில் தற்காலிக வாச கால பர்மிட் மனுக்களுக்கு முக்கிய காரணம்.

நேற்று வெளியான தொழில் கமிஷனரில் வருடாந்த நிர்வாக அறிக்கையில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக வாசகால பர்மிட் கோரி 135 பேர் சென்ற வருடம் மனுச் செய்ததாகவும் இவற்றில் 119 பேரின் மனுக்கள் பைசல் செய்யப்பட்டதாகவும் இதர மனுக்கள் பரிசீலனையிலிருப்பதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

## ஒப்பந்தத்தை அங்கீகரிக்க வேண்டாம்

### ஐ. நா. வுக்கு காங்கோ மந்திரி வேண்டுகோள்

### ரஷ்யாவும் கண்டிக்கிறது

லியப்போல்ட்வில்லி, அக். 18

கடாங்கா அதிபர் ஷோம்பேயுடன் ஐ. நா. பிரதிநிதி கியாரி செய்துகொண்ட ஒப்பந்தத்தை அங்கீகரிக்க வேண்டாமென்று ஐ. நா. தலைமைக் காரியாலயத்தை காங்கோ மத்திய அரசாங்க வெளிவிவகார மந்திரி திரு. பொம்பகோ கேட்டுள்ளார்.

ஐ. நா. விலுள்ள சோவியத் பிரதிநிதி திரு. ஸோரினும் இந்த ஒப்பந்தத்தைக்கண்டித்துள்ளார். பாதுகாப்புச்சபையின் தீர்மானத்தை இந்த ஒப்பந்தம் கைகழுவி விடுவதாக அவர் தெரிவித்துள்ளார். கடாங்கா ஒரு தனிராஜ்யம் என்பதை இந்த ஒப்பந்தம் நிரூபித்து விடுகிறதென்றும் இதை அங்கீகரிக்க கூடாதென்றும் திரு. ஸோரின் தெரிவித்துள்ளார்.

கியாரியும் ஷோம்பேயும் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் படி கடாங்கா சண்டையின் போது கைதுசெய்யப்பட்ட கைதிகளை அவரவரிடம்திருப்பி ஒப்படைக்கவேண்டும். கைதிகள் பரிவர்த்தனை சென்ற திங்கட்கிழமை நடைபெறுவதாக இருந்தது. ஆனால் ஒப்பந்தப்படி விமான நிலையம், ரேடியோ நிலையம் ஆகியவைகளை ஐ. நா.திருப்பிக்கொடுக்கவில்லையெனக்கூறி தமதுவசமுள்ள ஐ. நா. படையைச் சேர்ந்த 191 ஜரிஷ்சிப்பாய்களையும் திருப்பிக்கொடுக்க ஷோம்பே மறுத்துவிட்டார்.

ஷோம்பேயின் 'ஒப்பந்தத்துக்கு முரணான நடவடிக்கை' காரணமாக புதிய சூழ்நிலை உருவாகியுள்ளதென்றும் நெருக்கடி நிலைமையொன்றை ஷோம்பே மீண்டும் உருவாக்குகிறாரென்றும் எலிஸபெத்வில்லியிலுள்ள ஐ. நா. அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைதிகள் பரிவர்த்தனைக்கு ஷோம்பே இணங்கும்வரை ஒப்பந்தம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப் படுமென்றும் ஐ. நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## புதிய சட்டம் வருகிறது

### இன்ஷூரன்ஸ் கம்பனிகளுக்கு!

கொழும்பு, புதன்

இன்ஷூரன்ஸ்கம்பனிகளின் அலுவல்களைக் கட்டுப்படுத்தும் சட்டமொன்றை உணவு வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன விரைவில் கொண்டு வரவிருக்கிறார்.

இப்பொழுது இலங்கையில் 35 ஆயுள் இன்ஷூரன்ஸ் கம்பனிகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## நேருவுக்கு ஹங்கேரி அழைப்பு

### நெதர் லண்ட்ஸில் ராதாகிருஷ்ணன்

ஆம்ஸ்டர்டாம், அக். 18

ஹங்கேரிக்கு விஜயம் செய்திருந்த இந்திய உபஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அங்கிருந்து ஆம்ஸ்டர்டாம் வந்து சேர்ந்தார். அவரை நெதர்லண்ட் ராணி ஜூலியானாவின் விசேஷ பிரதிநிதியும் மற்றும் அரசாங்கத் தலைவர்களும் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

இன்று ராணி ஜூலியானாவுடன் டாக்டர் ராதாகிருஷ்ணன் நண்பகல் விருந்துண்டார்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் புடாபெஸ்டிலிருந்து புறப்படுவதற்குமுன் நிருபர்களிடம் பேசுகையில் ஹங்கேரிக்கு விஜயம் செய்யுமாறு ஹங்கேரி விடுத்த அழைப்பை பிரதமர் நேரு ஏற்றுக் கொண்டுள்ளாரென்றும் எப்பொழுது ஹங்கேரிக்கு அவர் விஜயம் செய்வாரென்பது இன்னும் தீர்மானிக்கப் படவில்லையென்றும் தெரிவித்தார்.

### மணி வாக்கு

அறிஞனாகவும் சான்றோனாகவும் விளங்குவதற்குச் சில நூல்களை முறையாகப் பயின்றால் போதும்.

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஐப்பசி மீ 3 உ (19-10-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.

## சமாதான நம்பிக்கை

யார் என்ன வரம் கேட்டாலும் கொடுத்து விடுவாராம் சிவபெருமான். பஸ்மாசுரன் என்ற அசுரன் ஒரு வரம் கேட்டான். யாருடைய தலையில்தான் கை வைத்தாலும் அவர் பொசுங்கி பஸ்பமாகி விடவேண்டுமென்று வேண்டினான். கேட்ட வரம் கிடைத்து விட்டது. பின்னர் சிவபெருமானின் முடிமீதே தன்கையை வைத்துப் பரீட்சிக்க முயன்றானும் அந்த அசுரன். மகாவிஷ்ணு ஓர் அழகிய பெண்ணுருவில் வந்து, அந்த அசுரனை மயக்கியதாயும் முடிவில் அந்த அசுரன் தன் தலையிலேயே தன் கையை வைத்துப் பொசுங்கி மாண்டதாகவும் ஒரு புராணக் கதையுண்டு.

மாஸ்கோவிலே ரஷ்ய பிரதமர் குருஷ்சேவ் கம்யூனிஸ்ட் காங்கிரஸில் செய்த ஒரு முக்கிய பிரசங்கத்தில் தங்களிடம் 10 கோடி டன் அணுகுண்டு இருப்பதாயும், ஆனால் அதைத் தாங்கள் வெடிக்கப்போவதில்லை என்றும், அதை வெடித்தால் தங்கள் வீட்டு ஜன்னல்களே உடையுமென்றும் கூறி, என்றுமே அக்குண்டை வெடிக்கவேண்டிய அவசியமில்லாமல் கடவுள் அருள் புரிய வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டதும், பழைய பஸ்மாசுரன் புராணக் கதை நமக்கு ஞாபகம் வந்தது. அந்த பயங்கர குண்டை வெடித்தால், தங்களுக்கே நாசமேற்படுமென்பதை ரஷ்ய பிரதமர் உணர்ந்துள்ளது பெரிய காரியம். அதைவிட அக் குண்டை வெடிக்கவேண்டிய அவசியமின்றி ஆண்டவன் அருள் செய்ய வேண்டுமென்று தெய்வத்தைப்பற்றி அவர் குறிப்பிட்டது அதைவிட பெரிய காரியம்.

இம்மாதத்துக்குள்ளாக அணு ஆயுத சோதனையை முடித்துவிடுவதுடன், ஜெர்மன் விஷயமாக இவ்வாண்டுக்குள் சமாதான உடன்படிக்கை செய்யவேண்டுமென்ற நிபந்தனையையும் தாங்கள் வற்புறுத்தப்போவதில்லை என்றும் பிரதமர் குருஷ்சேவ் அறிவித்துள்ளார். மேலும் உலகப் பிரச்சினைகளை யுத்தமில்லாமலே சமரசமாகத் தீர்த்துக்கொள்ளலாமென்றும் அவர் தெரிவித்து யுத்த ஆபத்தை ஒத்திப் போட்டு, சமாதான நம்பிக்கையை பலப்படுத்துவதாக இருக்கின்றது.

யுத்த அரக்கனை மகிஷாசுரனைக் கொன்று பராசக்தி வெற்றிவிழா கொண்டாடும் நாள் இது. இன்றைய தினத்தில் உலகிலே யுத்த ஆபத்துகள் நீங்கி, எல்லாரும் அமைதியாக சுபிட்சமாக வாழுவதற்கு பிரதமர் குருஷ்சேவின்பேச்சு ஒருசுபசூசகமாக இருக்க பராசக்தி அருள் செய்ய வேண்டுமென்பதே நமது நம்பிக்கையும் பிரார்த்தனையுமாகும்.

---

## ஹோட்டல் சுகாதாரம்

ஹோட்டல்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்றும், அங்குள்ள சிப்பந்திகள், சுகாதாரத்துடன் இருப்பதாக நகரசபை கமிஷனரிடம் அத்தாட்சிப் பத்திரம் பெறவேண்டுமென்றும், உணவுகளையும் சுத்தமான முறையில் வைத்திருக்க வேண்டுமென்றும் ஸ்தலஸ்தாபன கமிஷனர் புதிய உத்தரவுகளைத் தயாரித்துள்ளார். ஹோட்டல்களையே பலரும் நம்பி வாழ வேண்டியிருக்கும் இந்த நவநாகரிக காலத்தில், அவை மிகவும் சுத்தமாக இருக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தத் தேவையில்லை. இன்று நமது ஹோட்டல்களில் பலவற்றிலும், சிப்பந்திகள் அழுக்குப் பிடித்த உடை உடுத்தியும், சுகாதாரமற்ற முறையில் மிக ஊழலாக அங்கு காரியங்கள் நடப்பதும், பல வியாதிகளுக்கும் காரணங்களாக இருக்கின்றன. வெறும் காகித உத்தரவு போடுவதாலோ, தண்டமடிப்பதாலோ, நிலைமை மேம்பட்டுவிடாது. இன்று ஹோட்டல் நடத்துபவரில் பலருக்கும் போதிய பண வசதியோ, பயிற்சிபெற்ற சிப்பந்திகள் வசதியோ இல்லை. பலபல இன்னல்களுக்கிடையே, இந்தச் சேவையை அவர்கள் செய்கின்றனர். ஆகவே ஸ்தலஸ்தாபனம் அல்லது அரசாங்கம், ஹோட்டல் சிப்பந்திகளுக்கான பயிற்சி வகுப்பை நடத்துவதுடன், சுகாதார முறையில் ஹோட்டல் நடத்துவதுக்கு கடன் உதவியையும் அளித்தாலே, ஹோட்டல் சேவை அபிவிருத்தியடைய வழிபிறக்கும்.

---

# உணவு உற்பத்தியைப் பெருக்கவழி

### விவசாயத்தில் சில உண்மைகள்

**நிலப்பரப்பைப் பெருக்காது உள்ள நிலத்தில் நல்ல முறையில் வளமாக்கி விளைச்சலைப் பெருக்குவது சிறந்த வழியென இன்றைய விவசாய நிபுணர்கள் கருத்து. இந்த உண்மையை நமது முன்னோர் உணர்ந்திருந்தனர் என்பதை இக்கட்டுரை விளக்குகின்றது.**

உணவு உற்பத்தியைப் பெருக்க இரு வழிகள் உண்டு. விவசாயம் செய்யும் நிலப் பரப்பை அதிகமாக்குதல் ஒரு வழி. ஆனால் அப்படி நிலப் பரப்பை அதிகப்படுத்துவது என்பது நினைத்தபடியெல்லாம் செய்யக் கூடியதல்ல. நீர்ப்பாசன வசதி, மழை, மண்ணின் தன்மை, இடத்தின் தட்பவெப்ப நிலை. இப்படிப்பலவற்றைப் பொறுத்தே அதை அதிகப்படுத்தலாம். மழை குறைவான பிரதேசங்களிலும், கற்பாறை போன்ற இடங்களிலும் மண் வளமற்ற பகுதிகளிலும் விளைநிலப் பரப்பை அதிகப்படுத்துவதில் அதிக இலாபம் இல்லை. சிரமமும் அதிகம். ஆகவே நிலப்பரப்பைப்பெருக்கிக் கொண்டே போவதைவிட உள்ள நிலத்தில் நல்லபடி உழவு செய்துஉரமிட்டு முறையாகப் பயிரிட்டு விளைச்சலைப் பெருக்குவது சிறந்த வழியென்பதை இன்றைய உலகம் ஒப்புக் கொண்டிருக்கிறது. இவற்றில் ஆழ உழுதால் விளைச்சல் அதிகம் காணும் என்பதும் இன்றைய ஆராயச்சிகளின் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது. இவ்வுண்மைகளைப் பண்டைய காலத்திலேயே நம் முன்னோர்கள் உணர்ந்து "அகல உழுவதிலும் ஆழ உழுதலே நன்று" என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லி வைத்தார்கள். உழுதலே நன்று என்ற தேற்ற 'ஏகாரம்' கொடுத்து கூறியுள்ளது இங்கு கவனிக்கத்தக்கது. இதே கருத்தில் ஆழ உழுதலின் சிறப்பைக் கூறும் ஒரு சில இதர பழஞ்சொற்களையும் கீழே காண்க:

ஓடி ஓடி நூறு குழி உழுவதைப் பார்க்கிலும் அமர்ந்து அமர்ந்து ஆறு குழி உழுவது நன்று.

அதிர அடித்தால் உதிர விளையும்.

உழ அற உழுதால் விளைவற விளையும்.

### எரு இடுதல்

வேளாண்மைக்குஉழவுமுதல் முக்கியமென்றாலும் எரு இடுதலும் அடுத்தபடி முக்கியமாகும். வளமற்ற நிலத்தில் உழுது விதைத்தால் சிறப்பான விளைச்சல் காணாது. மண்ணுக்கு வளமூட்ட நிலத்திற்கு எரு இடுதலின் முக்கியத்துவத்தை உணர்த்தும் பழஞ் சொற்கள் நூற்றுக் கணக்கில் உள்ளன. எப்படிப்பட்ட எருவை இட வேண்டும், எவ்வளவு இட வேண்டும், எவ்வாறு இட வேண்டும் என்றெல்லாம் கூட அந்தப் பழமொழிகள் உணர்த்துகின்றன. அவற்றில் நுணுக்கமான உண்மைகளைக்கொண் சில பழமொழிகளை மட்டும் இங்கே காண்போம்:

"எருக்குழையின்றி ஏர் பிடியாதே"

(விவசாயம் செய்யத் தொடங்குமுன் முதல் வேலையாக எருவைச் சேகரித்துக் கொள்ளவேண்டுமென்பது இதன் கருத்து)

"எருவணமில்லாத பயிரும் நறுமணமில்லாத மலரும்"

"நிலத்தில் எழுந்த பூண்டு நிலத்தில் மடியவேண்டும்,'

(களைகளையும் புல் பூண்டுகளையும் ஓர் முறை உழுதுமடக்கி விட்டால் அது மண்ணுக்குள் படிந்து உரமாகும். ஆகவே அதை நினைவில் கொள்ள வேண்டுமென்பது இதன் கருத்து)

"ஆடு ஊடாடாதா காடு விளையாது"

உரங்களிலெல்லாம் ஆட்டு உரம் மேலானது. ஆகவே ஆட்டு உரத்திற்கு இவ்வளவு உயர்வு கொடுத்துக் கூறப்பட்டுள்ளது.

### ஒரு முழம் கட்டை

உழுதல், உரமிடல் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக, பயிர்ப் பாதுகாப்பு விவசாயத்தில் இன்றியமையாத நடவடிக்கையாகும். விவசாயி தனது வயலில் நேரடியான கருத்துச் செலுத்தி எப்படிப் பயிரை கண்ணிமைப் போல் காப்பாற்ற வேண்டுமென்பதை உணர்த்துகின்ற தமிழ்ப் பழஞ் சொற்களும் ஏராளம் உள்ளன. அந்தச் சொற்களை ஆராய்ந்தால் நம் முன்னோர்கள் பயிர்ப் பாதுகாப்பின் அதி முக்கியத்தை எவ்வளவு நன்றாக உணர்ந்திருந்தார்கள் என்பது புலப்படும். அவற்றில் சிலவற்றைக் கீழே காண்போம்.

"பாராது கெட்டது பயிர் ஏருது கெட்டது குதிரை"

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலர்ந்து இல்லாளின் ஊடிவிடும்"

"தான் பாராதது தரிசு"

"அடைத்தவன் காட்டைப் பார், மேய்த்தவன் மாட்டைப் பார்"

"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின் நீரினும் நன்றதன் காப்பு"

ஒவ்வொரு பயிருக்கும் ஒவ்வொரு பயிரிடும்பருவம்உண்டு. அவ்வப்பருவங்களும், சூழ்நிலைகளும் அறிந்து பயிரிட்டால் தான் விளைச்சல் நன்றாக இருக்கும். இந்த உண்மையைத் தமிழக விவசாயிகள் நன்கு உணர்ந்திருந்தர்கள். அதற்குச் சான்றாக இன்று காணப்படும் எண்ணற்ற பழமொழிகளில் ஒரு சிலவற்றை இங்கே காண்போம்.

"பருவத்தே பயிர் செய்"

"காலத்தில் பயிர் செய்தால் கடன் வாங்க வேண்டாம்"

"ஐப்பசியில் நெல் விதைத்தால்அவலுக்கும் நெல்ஆகாது"

"தைக் குருவை தரையை விட்டெழும்பாது"

"ஆவணியில் நெல் விதைத்தால் ஆனைக்கொம்பு தானாய் விழும்"

"மாசிக் கரும்பும் மகர வாழையும்"

### எருது இளைத்தால்

விவசாயிக்கு உறுதுணையாக விளங்குகின்ற கால்நடைச் செல்வத்தை அவன் தெய்வமாக மதித்தான். தன் குடும்பத்தின் வாழ்வும் தாழ்வும் தன்னுடைய கால் நடைச் செல்வத்தைப் பொறுத்திருக்கிறதென்று பரிபூரணமாக உணர்ந்திருந்தான். கால்நடைச் செல்வ பராமரிப்புப் பற்றியும் அவற்றின் இலட்சணம் முதலானபற்றியும் வழங்கும் பழஞ்சொற்கள் இந்த உண்மையை நன்கு உணர்த்துகின்றன. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே காண்போம்.

"மேய்த்துத் தெளியாத மாடு தேய்த்துத் தெளியும்"

"கறவைப் பசுவையும் கைக் குழந்தையையும் கண்ணைப் போற்றவேணும்"

"ஆடு கொழுத்தால் இடையனுக்கு இலாபம்"

### நீர் ஏற நெல் ஏறும்

பயிர்களுக்குள் அதிகமாகத் தண்ணீரை விரும்புகின்ற பயிர் நெல். நீர் அதிகமானாலும் தாக்குப் பிடித்து அதிகப் பயன் தரக்கூடிய நெல் என்பதை இந்தச் சொல் காட்டுகிறது. பயிர்களின் தன்மை, பருவத்தின் தன்மை முதலான வெவ்வேறு பல அறிவியல் உண்மைகளைக் குறிக்கும் பழஞ் சொற்களும் தமிழில் ஏராளம் உள்ளன. அப்பழஞ் சொற்களை நோக்கினால் நம் முன்னோர்கள் விவசாயத்துறையில் சிறந்த அறிவு கொண்டிருந்தனர் என்பதை மறக்க முடியாது. அவர்கள் கண்டு கூறியவைகள் முக்காலத்தும் உண்மைகளாகும்.

"மடை ஏறப்பாய்ச்சினால் தடையற விளையும்"

(நெல் மகசூல் நீருட்டத்தைப் பொறுத்த தென்பது)

"நட்டுக் காய்ந்தால் நாழி நெல் காணாது"

(நட்டதும் நீர் நிறையப் பாய வேண்டுமென்பது)

"பாயாத கருங்காட்டிற்குப் பருத்தி விதைத்தால் பலன் தரும்"

(புஞ்சை கரிகல் மண்ணில் பருத்தி அதிக இலாபம் தரும் என்பது)

"வெட்டிக்கெட்டது தென்னை வெட்டாமல் கெட்டது பனை"

(தாவர வளர்ச்சியை ஊக்கும் வகை சொல்வது)

"பாறை முறிக்க வேலமரம் நீரைத் தெளிக்க நெல்லி"

(பாறையைக் கருவேல் தகர்த்துவிடும் என்பதும் நீரை நெல்லி மாற்றிவிடும் என்பதும்)

இப்படிப் பல்வேறு உண்மைகளையும் தெரிவிக்கும் விவசாய பழஞ் சொற்கள் தமிழில் ஏராளம் உள்ளன. அவைகள் செவிவழியாக உலவுவதால் ஒரு சில சொற்கள் பொருள் மாறுபட்டுக் காணப் படுகின்றன. அப்படிப் பிழைபட்டு காணும் பழஞ்சொற்களை ஒதுக்கிவிட்டு உயர்ந்தஉண்மைகள் பொதிந்த சொற்களைப் பாதுகாப்பது இன்றைய தேவையாகும்.

---

## தேசிய ஒருமைப்பாடு

சென்னை, அக். 17

தமிழ் இனம், தமிழ் இலக்கியம், தமிழர் கலாச்சாரம் ஆகியவைகளை அழிப்பதற்காக தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் இந்தி ஏகாதிபத்தியம் நடவடிக்கை எடுத்து வருவதாக நாம் தமிழர் கட்சி ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

---

## ஐயாறன் எழுதுவது

நாற்பது அல்லது ஐம்பது வயது ஆகிவிட்டால், காடு வாவா, வீடு போ போ என்று நம்மில் பலரும் நினைக்கிறோம். ஆனால் லண்டனிலே 102 வயதான ஒரு மாப்பிள்ளை, 73 வயதான ஒரு மணப் பெண்ணை மணந்து மகிழ்ச்சியுடன் வாழ்வதாக ஒரு செய்தி கிடைத்துள்ளது.

"எனக்கு வயது 102. நானே பிரிட்டனில் மிக வயதானமாப்பிள்ளை!"என்று ஸிட்னிதெயின் டெலிவிஷனில் கூறினர் ஜனனப் பதிவுப்படி அவரது உண்மையான வயது 79 தான் என்று ஒருவர் சுட்டிக்காட்டியதும், "நான் ஏதோ தவறு செய்துவிட்டதாகவே தெரிகிறது. எனக்கு 79 தான்"என்று ஒப்புக்கொண்டார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த மணப் பெண் சற்றே திகைத்துவிட்டு, பின்னர், சிரித்துக் கொண்டே, "இதுவே எனக்கு மேலான விவாகப் பரிசு. நான் நினைத்ததைவிட 20 வருஷம் இளமை என்பதை அவர் மறைத்து வைத்திருந்தார். அவர் ஒரு பொடியன் தானே!" என்றாராம்!

விவாகத்துக்கு வயது உச்சவரம்பேது? இருவர் மனமும் ஒப்பினால் மணம். பெரியார் ஈ. வெ. ரா.60க்கு மேல் செய்து கொண்ட மறுமணத்துக்கு அன்று எதிர்ப்பு இருந்தது. ஆனால் அத் தம்பதிகள் பல வருஷ காலமாக மகிழ்ச்சியுடனே வாழுகின்றனர். எதிர்ப்பெல்லாம் மறைந்துவிட்டதைப் பார்க்கிறோம்.

காந்தி, நேரு, ராஜாஜி போன்று பலர் ஏக பத்தினி விரதமாக இருக்கின்றனர். அவர்கள் விஷயம் வேறு.

* * *

சென்ற சில நாட்களாக நவராத்திரியை முன்னிட்டு பல இடங்களிலும் இசை, நடனம் முதலியன நடந்து வந்தன. இங்கு கலைச் செல்வம் எவ்வளவு அதிகரித்துள்ளதென்பதைக் காண முடிந்தது.

ஒரு பாடகருடன் இதுபற்றி பேசிக்கொண்டிருந்தேன். தாங்கள் மிக சிரமப்பட்டு கற்ற வித்தையை, கேட்டு ரஸிக்க இங்கு ஆட்கள் இல்லையே என்று ஒருவித ஏமாற்றத்துடன் கூறினர். இதே வித உணர்ச்சி பல கலைஞரிடமும் இருப்பதை அறிந்தேன்.

ஒரு கலையை பயிலுவதென்பது லேசல்ல. போன ஜன்மத்தில் புண்ணியம் செய்திருந்தாலே, குடம்குடமாகத் தேனபிஷேகம் செய்திருந்தாலே இனிமையான சாரீரம் இருக்குமென்று கூறுவர். அவ்வித சாரீரம் பெற்று, பல வருட காலம், பணத்தைசெலவழித்து இசை பயின்றவர்கள், அக் கலைச் செல்வத்தைப் பயன்படுத்தாது போயின், அவ்வளவும் நஷ்டமல்லவா?

பயிர்களுக்கு மழை எப்படியோ அப்படி கலைஞர்களுக்கு ரஸிகர்கள்; கலைஞர்களைப் போற்றி பாராட்டினாலே கலைகளும் வளரமுடியும். கலைஞர்கள் பலர் பாடவும், நடிக்கவும், நடனமாடவும் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். காசு பணம் கூட அவர்களில் பலர் எதிர்பார்க்கவில்லை. கலைப்பணி செய்ய நல்லசந்தர்ப்பத்தையே வேண்டுகிறார்கள்.

உள்ளூர் கலைஞரென்றால் நம்மிடையே ஒருவித அலட்சியம். இந்த மனப்பான்மை அடியோடு மாறவேண்டும். ஆங்காங்கே கோவில்கள், பள்ளிக்கூடங்கள் முதலிய பொது ஸ்தலங்களிலே, அடிக்கடி கலைவிருந்துகளை அளிக்க ஒழுங்கு செய்து, கலைஞர்களை ஆதரித்து ஊக்குவது கலைகள் வளர்வதுடன், இங்கு நம் வாழ்க்கையு புது மலர்ச்சி பெற வழி செயும்.

* * *

பல வாரங்களுக்குப் பிறகு

(5ம் பக்கம் பார்க்க)

# நேர்மையும் பக்தியும் வெற்றி தரும்

## நவராத்திரி கலைவிழாவில் உடுப்பிட்டி எம். பி. அறிவுரை

மாவிட்டபுரம், புதன்

"தனிமனிதனுகட்டும் சமுதாயமாகட்டும். துன்பம் மலையாகக் குவிந்த காலத்திலும் கூட நேர்மையான முறையில் கடவுள் பக்தியுடன் முயற்சி செய்வானுயின் அசைக்க முடியாத சக்தியெனக் கருதப்படும் எந்தச் சக்தியையும் வெற்றிபெற்று ஈற்றில் சுதந்திர புருஷனுக வாழ்வான்."

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் குரும்பசிட்டி உதயதாரகை சனசமூக நிலைய ஆதரவில் நிகழ்ந்த கலைவிழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு "சமயமும் நவீன சமுதாயமும்" என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நேற்றிரவு நடைபெற்ற இவ்விழாவில் திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

இரவில் வல்லைவெளியிற் பிரயாணம் செய்யும்போது 'அதோகொள்ளிவாய்ப் பிசாசு' பிள்ளையாரைக் கும்பிடு என்று தந்தையார் மகனிடம் கூற இளம் சிறுவன் அப்படியே செய்து விடுகிருன். காலகதியில் அச்சிறுவன் விஞ்ஞானம் கற்று ஒருவித வாயு இரவிற் பிரகாசமாய் ஒளி வீசுவதே தவிர கொள்ளிவாய்ப் பிசாசு என ஒன்று இல்லையென உணரும்போது கொள்ளிவாய்ப் பிசாசுடன் தந்தையார் இணைத்துக் கூறிய பிள்ளையாரையும் அவன் மனம் ஒப்புக் கொள்ள மறுத்துவிடுகிறது. இதனலேயே இக்கால இளைஞர்கள் கடவுள் இல்லையென வாதிடும் சமயமறுப்பாளர்களாகிவிடுகிருர்கள். ஆகையால் தாய்மார்களே கடவுள் பெயரால் குழந்தைகளிடம் மூடநம்பிக்கையை ஏற்படுத்த முயலாதீர்கள்.

மக்களை இணைத்து வைத்ததற்குச் சமயம் அத்தியாவசியமானது என்பதை மதத்தில் அவ்வளவு நம்பிக்கையற்ற நவசீனவே எண்ணுகிறது. அது இலங்கையுடன் நட்புறவு கொள்ள புத்த சின்னத்தையே ஆயுதமாகக் கொண்டது.

### தீண்டாமை ஒழிய வேண்டும்

நமது சமுதாயத்தில் புல்லுருவியாகக்காணப்படும் தீண்டாமை சைவசமயத்தின் அத்தியாவசியமான அம்சமல்ல. ஒரு சில சுயநலமிகளால் புகுத்தப்பட்ட இந்தச் சாதி வேற்றுமை தற்பொழுது சிறிது சிறிதாக ஒழிந்து வருகிறது. தீண்டாமை ஒழிந்து போக நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இந்தச் சாதி வேற்றுமைக்கு நீரூற்றி வளர்த்தால் நிச்சயம் எமது சொந்த மண்ணிலே நாம் என்றென்றும் அடிமைகளாகத்தான் வாழ்வோம். கடவுளைச் செந்தமிழால் சமயகுரவர்கள் சிறப்பாகப் பாடி இருக்கிருர்கள். எனவே தமிழ் மொழியால் ஏன் கோவில்களில் அர்ச்சனை செய்யக்கூடாது? இந்தியாவிலே பல சமய அறிஞர்கள் இந்தப் பிற்போக்கான கொள்கைகளைச் சைவசமயத்தில் இருந்து நீக்கிவிட்டனர். அதுபோல நாமும் இலங்கையில் செய்தல் வேண்டும்.

நீதியைக் கடைப்பிடித்து வாழ்க்கையை நடாத்துவது தான் சமயம். எந்தவிதப் பிரச்சனையையும் நீதியான முறையில் தீர்த்தால்தான் அப்பிரச்சினைக்கு நிரந்தர முடிவு காணலாம். எந்தப் போராட்டமும் அல்லது கோரிக்கைகளும் வெற்றிபெற வேண்டுமானுல் போராட்டத்தை நடாத்துபவர்கள் கோரிக்கைகளை விடுபவர்கள் சமயத்தில் இதயபூர்வமாக நம்பிக்கை இருக்க வேண்டும். அநீதியின் அடிப்படையில் செல்பவனுக்கு அதி விரைவில் கஷ்டங்கள் ஏற்பட்டே தீரும். இதற்கு எமது நாட்டின் கடந்த ஐந்து வருடகாலச் சரித்திரமும் ஹிட்லரின் வீழ்ச்சியும் நல்ல உதாரணங்களாகும்.

சைவசமயத்தில் கட்டுப்பாட்டின்மை சிறந்த அம்சமாகும். ஒருவனுக்கு எந்த வழி சிறந்தது என அறிவுக்குப் படுகிறதோ அந்த வழியில் அவன் கடவுளை வழிபட அனுமதிக்கப்படுகிருன். அர்ச்சனை போன்றவற்றிற்குச் செலவிடும் பெருந் தொகையான பணத்தை இந்து கலாச்சாரத்தை வளர்க்கப் பயன்படுத்த வேண்டும்.

மேற்படி வைபவத்துக்கு யாழ்நகரசபைத் தலைவர் திரு. டி. எஸ். துரைராசா தலைமை தாங்கினர். கலையை நாம் வளர்க்கக் கடமைப்பட்டிருக்கிருேமெனினும் மக்களின் நல்வாழ்வையும் வளம்படுத்த முயல வேண்டியது சனசமூக நிலயங்களின் கடன் என்று திரு. துரைராசா கூறினர்.

கோண்டாவில் ஞானேதய சபையின் "அரிச்சந்திரா" கொட்டகைக் கூத்தும், யாழ் ஜெயசக்தி நாடக மன்றத்தினரின் "பெட்டீசம் போட்டு மடக்குவேன்" என்ற நகைச்சுவை நாடகமும் நடைபெற்றது. செல்விகள் பாரதா—சாரதா சகோதரிகள் இன்னிசை விருந்தளித்தார்கள்.

---

# திருக்கேதீசுவரம் சிவானந்தகுருகுலம்

யாழ்ப்பாணம், புதன்

திருக்கேதீசுவரம், சிவானந்த குருகுலத்தின் ஆலோசனைச் சபையின் கூட்டம் சமீபத்தில் யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலயத்தில் நடைபெற்றது. சிவஸ்ரீ எஸ். குமாரசுவாமிக் குருக்கள் தலைமை வகித்தார். குருகுலத்தின் மனேஜர் சேர் கந்தையா வைத்தியநாதன், செயலாளர் உட்பட வேறும் நான்கு பிரபல சைவாசிரியர்கள் சமுகமளித்தனர். இக்கூட்டத்தில் குருகுலத்துக்கான நேரசூசியும் பிறவிபாரங்களும் தயாரிக்கப்பெற்றன. இவ்வாண்டு நவம்பர் மாதம் 11-ந் திகதி குருகுலத்தை ஆரம்பிப்பதெனவும் முடிவுசெய்யப்பெற்றது.

---

# சீனியில் மோசடி?

கொழும்பு, புதன்

சென்ற வெள்ளிக்கிழமை ஒரு கப்பலிலிருந்து சீனி இறக்குமதி செய்யப்பட்டதில் மோசடி நடைபெற்றிருப்பதாக உணவுக் கமிஷனர் இலாகா கண்டுபிடித்துள்ளது.

உணவுக் கமிஷனர் திரு. ஆர். எல். அர்னேல்டாவுக்கு எழுதிய அந்தரங்கக் கடிதமொன்றில் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி இந்த மோசடி பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இலாகா அதிகாரி ஒருவர் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளாரென்பதற்கு தென்னிடமுள்ள தஸ்தாவேஜுகள் சான்று என்று அவர் அந்தக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

---

# தெ. கி. ஆசிய நாடுகளின் தலைவர்கள் மகாநாடு

## இலங்கை கூட்டவிருக்கிறது

கொழும்பு, புதன்

தென் கிழக்கு ஆசியநாடுகளுக்கிடையே ஒத்துழைப்பையும் நல்லுறவையும் ஏற்படுத்துதற்கான மகாநாடு ஒன்றை இலங்கை வெகு விரைவில் கூட்டவிருக்கிறது. தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் தலைவர்கள் பலர் உட்பட மகாநாடு ஒன்று கூட்டுவதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன. தெற்கு, தென் கிழக்கு ஆசிய பிரதேச ஒற்றுமை யுண்டுபண்ணுவதற்கான இந்த முயற்சியைக் காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்காவே ஆரம்பித்து வைத்தார். இந்நாடுகளுக்கிடையே ஒற்றுமையை எவ்வாறு உண்டுபண்ணலாம் என்றும் எந்த அளவுக்கு உண்டு பண்ணலாம் எனவும் இம் மகாநாட்டில் ஆராயப்படவிருக்கிறது.

தெற்கு தென் கிழக்காசிய நாடுகளுக்கான ஒரு பொதுச் சந்தைய ஒப்படுத்துவதற்கான முறையில் நாடுகளின் ஒற்றுமை ஆராயப்படும். வர்த்தகத்தை விஸ்தரிப்பதும் பொருளாதார ஒத்துழைப்பையும் ஏக லாபத்தையும் உண்டுபண்ணுவதுமே இம்முயற்யின் அடிப்படை நோக்கங்களாகும். இம்மகாநாடு வெகு விரைவில் கூடப்படுமெனத் தெரிகிறது.

---

# புதிய கல்விக்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறிய திரு. சோமசேரம் சென்ற காலங் ளில் ஆசிரியர்களுக்கு உத்தியோகம் அளிப்பதில் பெரிய பல மோசடிகள் நடைபெற்று வந்தன வென்றும் கூறினர்.

கடந்த காலத்தில் பாடசாலைகளுக்கு அரசாங்கம் அளித்துவந்த உதவி தொடர்ந்தும் அளிக்கப்பட்டால் தற்போதைய தரத்தில் அவைகளைப் பேணவும் முன்னையவிட துரிதமாக அபிவிருத்தி செய்யவும் முடியும் என்று திரு. சோமசேகரம் கூறினர்.

---

# தமிழர் வாழ்வில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளுக்கு சிறந்த முறையில் கல்வி புகட்ட வேண்டும்.

திராவிடர்களின் கலாச்சாரம் புராதனப் புகழ் வாய்ந்தது. உலகில் உள்ள பிற மொழிகளைவிட தமிழ் மொழி பழைமை வாய்ந்தது. தமிழ் மொழியில் மாத்திரமே சொல் வளமும் பொருள் வளமும் நிறையக் காணப்படுகிறது. எனவே தமிழர்களின் கலாச்சாரப் பெருமைகளைப் பேணி நடக்க பெருமைகளை நிலை நாட்ட உலக வரலாற்றில் தமிழ்க் கலாச்சாரம் புதுப் பொலிவு பெற தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க முன்வர வேண்டும்.

### ஈழத் தமிழர் இனம் உருவாக வேண்டும்

முன்னுள் சொலிசிட்டர் ஜெனரல் திரு. எம். திருச்செல்வம் பேசுகையில், உலகத் தமிழர்களின் வரலாறுகளில் தமிழ்ப் பெருமக்கள் பல்வேறு துறைகளிலும் முன்னேறியிருப்பதாகக் காணக்கிடக்கிறது. எனினும் இலங்கையைப் பொறுத்தவரை எவ்விதமான முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளதாகக் கூறமுடியாது என்று கூறினர்.

"இந் நிலையை மாற்றியமைத்து அனைவரும் முன்னேற இலங்கைத் தமிழர் இந்தியத் தமிழர் என்றும் நிலைமையை மாற்றி ஈழத் தமிழர் என்னும் முறையில் ஒன்றுபட்டு உழைக்க முன்வரவேண்டும். தமிழர்களின் கலாச்சாரம் தொன்மை வாய்ந்தது. சிந்து வெளி நாகரிகம், புதைபொருள் ஆராய்ச்சியின் வாயிலாக திராவிடர்களின் கலாச்சாரப் பெருமையை நினைவூட்டுகிறது. எனவே தமிழ்ப் பெருமக்களின் நிலையை உணர்த்த தமிழர்களின் பண்பாட்டை பேணி வளர்க்க முன்வரவேண்டும்" என்று அவர் கேட்டுக்கொண்டார்.

டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பேசுகையில் "தமிழ் மொழி நமது உயிர். நாம் தமிழ் இனம். நம்மிடையே எவ்விதமான கருத்து வேற்றுமைகளும் உண்டாக நாம் ஒருபோதும் இடந்தரக்கூடாது என்ருர்.

### கல்விக்கு இயன்ற உதவி

மட்டக்களப்பு திரு. மாணிக்கம் பேசுகையில், மலைநாட்டில் வாழும் தமிழர்கள் தங்களுக்கு சொந்தமாக வீடு, நிலம், உரிமை முதலியவைகளைப்பற்றி எண்ணுமல் வாழ்ந்துவருகிருர்கள் இவைகளில் முக்கிய கவனம் செலுத்தவேண்டும். மலைநாட்டுத் தமிழர்களின் குழந்தைகளின் கல்வியைப்பொறுத்தவரை வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தங்களால் இயன்ற எல்லா உதவிகளையும் நிச்சயம் செய்வார்கள். எனவே இவ்வாருன சூழ்நிலைகளை உணர்ந்து மலைநாட்டு மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

---

# மலைநாட்டில் சங்கங்கள் வளர்ந்தன சமயம் வளரவில்லை

## சமய பிரசாரக்கூட்டத்தில் பேச்சு

## 'கடவுளை மறந்ததே கஷ்டங்கள் ஏற்படக் காரணம்'

நாவலப்பிட்டி, செவ்வாய்

மலைநாட்டில் தொழிற்சங்கங்கள் வளர்ந்த அளவிற்கு சமயம் வளரவில்லை. மலைநாட்டிலுள்ள பத்துலட்சம் தொழிலாளர்கள் எந்த மதத்தை சேர்ந்தவர்களென்று கூறமுடியாத நிலைமையில் வாழ்கின்றனர். சமய ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க தவறியமையே இன்று மலை நாட்டு தொழிலாளர்கள் பின் தங்கியிருப்பதற்கு காரணமாகும்.

இவ்வாறு தொழிற்சங்க பிரமுகரும் கதிரேசன் கல்லூரி உதவி அதிபருமான திரு. எஸ். வி. ஆறுமுகம் நாவலப்பிட்டியைச் சேர்ந்த கிறீன் ஊட் தோட்டத்தில் நடைபெற்ற சைவ சமய அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

கிறீன் வூட் பாடசாலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பெருந்தொகையான தொழிலாளர்கள் கலந்துகொண்டனர். பாடசாலை மண்டபம் மலர்களாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு திகழ்ந்தது.

தோட்டத்துரை ஸ்ரீ தியாகராஜா இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்து பேச்சாளர்களை வரவேற்ருர்.

திரு. எஸ். வி. ஆறுமுகம் மேலும் கூறியதாவது:-

இன்று இலங்கை தமிழ் பேசும் மக்கள் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மலைநாடு முதலான பிரிவுகளில் அதிகமாக வசிக்கின்றனர். மட்டக்களப்பு, யாழ்ப்பண மக்கள் சமயத்தின் அடிப்படையிலே வாழ்க்கையை அமைத்துக்கொண்டதால் சீரான வாழ்க்கையை நடத்துகின்றனர்.

### வாழ்க ஒழிக கோஷங்கள்

கடந்த இருபது ஆண்டுகளாக மலைநாட்டில் வாழ்க ஒழிக" என்ற கோஷங்கள் தான் தொழிற்சங்கங்களால் எழுப்பப்பட்டன. இதைவிட தொழிற்சங்கங்கள் அதிகமாக எதுவும் செய்யவில்லையென்றே கூறலாம். இருபது வருடங்களில் உருப்படியான பணிகள் செய்திருந்தால் இன்று உங்கள் நிலைமை இவ்வளவு பரிதாபகரமாக இருக்க நியாயமில்லை. தொழிலாளர்களின் இதயத்தில் அன்பு இரக்கம் முதலான பண்புகளை வளக்க தவறிவிட்டனர். இத்தகைய பண்புகள் வளர்க்கப்பட்டிருந்தால் தோட்டங்களில் சண்டை சச்சரவுகளும் ஏற்பட்டிருக்காது.

### ஆண்டவன்தான் இனி துணை

இன்றைய நிலையில் தொழிலாளர்கள் ஏதோ இழந்துவிட்டு ஏங்குபவர்கள் போல் காணப்படுகின்றனர். இனி தெய்வம்தான் துணை புரிய வேண்டும். வாழ்க்கையின் இலட்சியம் ஈடேற தெய்வ வழிபாடு அவசியம். தெய்வத்தால் ஆகாதது ஒன்றில்லை ஆண்டவன் சந்நிதியில் எல்லோரும் சமம். தெய்வ வழிபாடு எல்லோரையும் ஒன்றுபடுத்தும் சக்திவாய்ந்தது. இதனல் போட்டி, பொருமை கோபம் முதலானவை நீங்கி சாத்வீக குணங்கள் ஏற்படும். தோட்டப் பிரச்னைகளும் குறையும்.

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா சைவ அபிவிருத்திச் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் கூறியதாவது:-

நல்லதைச் சிந்திக்கப் பிறந்தவன் மனிதன். உடலைமட்டும் வளர்ப்பதற்கு நாம் பிறந்தவர் அல்ல. உள்ளத்தையும் வளர்க்கவேண்டும். இந்த உடலை மட்டும் பேணுவதில் காலம் கழிப்போமாயின் பிராணிகளுக்கும் மனிதர்களுக்கும் என்னதான் வித்தியாசம்? பிராணிகளும் கவலையின்றி உண்டு உறங்குகின்றன. இனத்தைப் பெருக்குகின்றன. மனிதனின் வாழ்வில் மாற்றம் ஏற்படவேண்டாமோ?

பணத்தை மட்டும் தேடி வைத்துவிட்டால் வாழ்க்கை சிறப்படையாது. ஆண்டவனை முன்வைத்து நடக்கும் வாழ்க்கைதான் பண்புடையதாக அமையும். நமது சைவமதம் பழம்பெருமையுடையது என்று பேசி பயனில்லை. சைவத்தில் உள்ள அனுஷ்டானம்ஒன்றையேனும் வாழ்க்கையில் கடைப்பிடிப்பதே சிறந்தது. சைவத்தை வளர்த்த பெருமை தாய்மார்களுக்குரியது.

இறைவனை இக்காலத்தில் சுலபமாக வழிபடுவதற்குக் கூட்டு வழிபாடு சிறந்த முறையாகும். மனிதப்பிறவி கிடைத்த பலனை அடைவதற்கு ஆலய வழிபாடு செய்யவேண்டும்!

கவிஞர் ஸ்ரீபரமஹம்சதாசன் பேசுகையில் இன்றைய நிலைமையில் தகுந்த கல்வியறிவு பெருமையினலேயே தோட்டத் தொழிலாளர்கள் பின்தங்கியுள்ளனர் என்று கூறினர்.

திரு. நா. அருமைநாயகம் கூட்டுவழிபாடு நடத்தினர்.

---

# ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலே செவ்வாயன்று இரவு நல்லமழை. ஊர் சுத்தமாகி குளிர்ந்துள்ளது. மரம் செடிகள் புத்துயிர் பெற்றுள்ளன. மழைகாலம் ஆரம்பமாவதற்கான, மப்பு மந்தார அறிகுறிகள் தோன்றியுள்ளன.

# 'பெருமக்களை கௌரவிக்க வேண்டும்'

## சிற்றம்பல முதலியார் தினத்தில் மாவட்ட நீதிபதி பேச்சு

உடுப்பிட்டி, புதன்

"தமிழ்ச் சமுதாயத்திற்குத் தொண்டுசெய்த பெருமக்கள் எங்கு பிறந்திருந்தாலும், அவர்களைக் கௌரவிப்பது தமிழ்மக்கள் கடனாகும். அப்பொழுதான் தமிழர் தமது இன்றைய நிலையையும், தம்மை எதிர்நோக்கியுள்ள கடமைகளையும் உணரமுடியும்" இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. என். சிவஞானசுந்தரம், கரவெட்டி சரஸ்வதி வித்தியாலய மண்டபத்தில் நடந்த கரவைச் சிற்றம்பல முதலியார் ஞாபகார்த்த விழாவுக்கு தலைமை தாங்கிப் பேசுகையிற் குறிப்பிட்டார்.

சரஸ்வதிவித்தியாலயத் தலைமை ஆசிரியை திருமதி இ. வெற்றிவேலு பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"சுயநலத்தையும் பிரித்தாளும் கொள்கையையும் கொண்ட ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சியில், பெண்கள் சமுதாய வாழ்விற் பங்கு கொள்ளாது தடுக்கப்பட்ட காலத்தில், கரவைப் பெரியார் சிற்றம்பலம் இக்கிராமத்தில் மூன்று ஆண்கள் பாடசாலைகளையும், ஒரு பெண்கள் பாடசாலையையும் கட்டியெழுப்பி ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். அதுமட்டுமன்றி சைவம் தழைத்தோங்க வேண்டுமென்ற கருத்துடன் அப்பாடசாலையைச் சைவப் பாடசாலையாகவும் அமைத்தார்.

இக் கூட்டத்தில் மாணவ, மாணவியரின் பாட்டுகள், பேச்சுகள், ஓரங்கநாடகங்கள் நடைபெற்றன. சைவசமய பாடத்தில் தேறிய மாணவருக்கு நீதிபதி திரு. சிவஞானசுந்தரம் பரிசில்களை வழங்கினார்.

திருவாளர்கள் அல்வைக் கணபதி, பி. கணேசன், சீ. தருமலிங்கம்ஆகியோரும் பேசினர்.

## சைவ இளைஞர் சங்கக் கூட்டம்

ஊர்காவற்றுறை, செவ்வாய்

சரவணை சனசமூகநிலைய சைவ இளைஞர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நேற்றிரவு நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் திரு. செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. நிலையக் காரியதரிசி திரு. நா. தவச்செல்வம்'இளைஞரும் சரஸ்வதி பூசையும்' என்னும் பொருள்பற்றிப் பேசினார்.

## பெரியம்மை நோயால் 13 பேர் மரணம்

கொழும்பு, புதன்

இலங்கையிலுள்ள மூன்று பகுதிகளில் பெரியம்மை நோய் பரவி வருவதாக குருநாகல் சுகாதார சேவை டைரக்டர் கூறியுள்ளார்.

இரண்டு பேருக்கு பெரியம்மை நோய் கண்டதாக நேற்று முன்தினம் தகவல் கிடைத்தது. ஒருவர் அங்கோடைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். பெரியம்மை நோயினால் அண்மையில் 13 பேர் இறந்துள்ளார்கள்.

பெரியம்மைகண்டிருந்தாலும் நோய்கண்டுள்ள மூன்று இடங்களிலிருந்து மக்கள் வெளியிடங்களுக்குச் செல்வதை வெளியிடத்து மக்கள் அங்கு செல்வதையும் தாம் தடுக்கப்போவதில்லை என்று சுகாதாரசேவை டைரக்டர் டாக்டர் டபிள்யு. ஏ. கருணரத்ன கூறியுள்ளார்.

நோய் பரவியுள்ள இடங்களை சுகாதார சேவை உதவி டைரக்டர் பார்வையிட்டு வருகிறார். உதவி டைரக்டரின் அறிக்கையைத் தாம் எதிர்பார்த்திருப்பதாக டைரக்டர் கூறியுள்ளார்

நோய் பரவிய மூன்று இடங்களுக்கும் போய்வருவோர்கள் நோய் தடுப்பு பால் கட்டிக் கொள்ளவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர்.

கன்ஓயா, அன்னுக்கன்னு ஆகியவை நோய் கண்டுள்ள இரு இடங்கள். கொழும்பு நகரசபை பொதுசன சுகாதார இலாகா பொது மக்களுக்கு நோய் தடுப்புப் பால் கட்ட ஆரம்பித்துள்ளது. சுகாதாரப் பகுதிப் பிரதான வைத்திய அதிகாரி டாக்டர் வி. நடராஜா பத்து பால்காட்டும் நிலையங்களைப் புதிதாக ஏற்படுத்தியுள்ளார். இந்த நிலையங்களில் மாலை 2 மணி தொடக்கம் 4-30 மணி வரை இலவசமாகப் பால் கட்டப்படும்.

---

பின்வருபவர்கள் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: செல்வன். ந. தெட்சணாமூர்த்தி, உப தலைவர்: செல்வன். ந. சற்குணபாலன், காரியதரிசி: செல்வன். வை. குருமூர்த்தி, உப காரியதரிசி: செல்வன். இ. சிவானந்தன், தனாதிகாரி: செல்வன். த. இராசலிங்கம்.

## அவசரகாலத்தை நீக்க கோரிக்கை

### நகரசபை தீர்மானம்

மொறட்டுவை, செவ்வாய்

அவசரகாலச் சட்டத்தை நீக்குமாறு பிரதம மந்திரியைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமொன்று மொறட்டுவை நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேறியது.

அவசரகால நிலை நீடித்துக் கொண்டுபோவது மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு முரணானதாகவும் மக்களின் சுதந்திரத்தைப் பறிப்பதாகவுமுள்ளது என்று அத்தீர்மானத்தில்குறிப்பிடப்பட்டுளளது

இத் தீர்மானத்தை திரு. பி. எஸ். பெர்னாண்டோ கொண்டுவந்தார். திரு மெரில் பெர்னன்டோ ஆமோதித்தார்.

திரு. டி. எல். வி. பீரிஸ் இத் தீர்மானத்தை எதிர்த்தார்.

## "மருத்துவசாலையை இடம் மாற்றுக"

உடுப்பிட்டி, புதன்

கரவெட்டி பிரசவசாலையில் கட்டிடங்கள் பழுதடைந்த நிலையிலிருப்பதாகவும், குடிக்கவோ, குளிக்கவோ வசதியில்லாதமையாலும், வேலிகள், கதவுகள் முதலிய பாதுகாப்புகள் இல்லாமையாலும், இப்பொழுது உள்ள இடத்திலிருந்து அரசாங்க வைத்தியசாலைக்கு அருகாமையிலுள்ள ஓர் இடத்திற்கு மாற்றுமாறு, செவ்வாய்க் கிழமை கட்டவேலிக் கிராமச்சங்கத் தலைவர் திரு. ஆர். சக்சிதானந்தத்தைத் தலைவராகக் கொண்ட ஒரு தூதுகோஷ்டி யாழ்ப்பாண சுகாதாரசேவை அதிபர் டாக்டர் ஜி. ஆர். என். நதானியலைக் கேட்டுக்கொண்டது.

மேலதிகாரிகளிடம் தொடர்புகொண்டு ஆவன செய்வதாக டாக்டர் நதானியல் வாக்குறுதியளித்தார்.

## மகாசபைத்தலைவரை செனட்டராக்குக!

யாழ்ப்பாணம், வியாழன்

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவரான திரு. எம். சி. சுப்பிரமணியத்தை செனட்டராக நியமிக்கும்படி கேட்டுக்கொள்ளும் தந்திச்செய்தியொன்றினை யாழ்ப்பாணம் சன்மார்க்க ஐக்கிய வாலிபசங்கம் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ளது.

இச்சங்கம் முன்னர் நிறைவேற்றிய தீர்மானத்துக்கமையவே தந்திச்செய்தி அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

# சீர்குலைந்த சமுதாயத்தை செப்பனிட்ட பாரதியார்

## ஆவரங்காலில் அறிஞர்கள் உரை

அச்சுவேலி, புதன்

**"பாரதிகண்ட சமுதாயத்திலே புல்லுருவிகளைக் காண முடியாது. புல்லுருவிகளை இந்த நாட்டிலிருந்து களைந்தெறிவதன் மூலமே பாரதிகண்ட இலட்சிய சமுதாயத்தை அமைக்க முடியும்"**

இவ்வாறு ஆவரங்கால் சந்தை மைதானத்தில் நடைபெற்ற ஆவரங்கால் சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 9வது ஆண்டு நிறைவு விழாவில் "பாரதி கண்ட சமுதாயம்" என்பது குறித்து உரை நிகழ்திய வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். விழாவுக்கு திரு. பி. சிவகுரு தலைமை தாங்கினார்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசியதாவது:-

நிலைகெட்ட மனிதர்களை நினைந்து துயரப்பட்ட பாரதியார் சீர்குலைந்த சமுதாயத்தைச் செப்பனிட சுதந்திரக் குயிலாக நின்று அடிமை விலங்கை அறுத்தெறியப் பாடுபட்டார்.

தனியொருவனுக்குணவில்லையெனில் இந்த சகத்தினை அழித்திடுவோம் என்ற ஒப்பற்ற இலட்சியத்தைக் கொண்ட சமுதாய அமைப்பையே பாரதியிடம் காணமுடிகிறது.

அடிமை மனப்பான்மையற்ற, உழைப்பாளிகளையும் வீரர்களையும் தாய்நாட்டுப்பற்றுடையவர்களையும் கொண்ட இலட்சிய சமுதாயமே பாரதியின் கனவு. பாரதி கண்ட இந்தச் சமுதாயத்தை அமைப்பதன் மூலமே நாமும் சுபிட்சமாக வாழ முடியும். எமது பிரயாணம் அந்த இலக்கை நோக்கிச் சென்று கொண்டிருக்க வேண்டும்.

### சோதனைகாலம்

கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரான ஆசிரியர் திரு. வி. பொன்னம்பலம் பேசும்போது கூறியதாவது:-

ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு இன்று ஒரு சோதனை நிறைந்த காலமாகும். அயல் நாடுகள் இந்த நாடுகளின் முன்னேற்றத்துக்கு தடைபோடுகின்றன. நம்முடைய பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்வதோடு பிறநாடுகள் எம்மைச் சூறையாடுவதையும் தடுத்து நிறுத்தாவிடில் இந்நாட்டின் பிரச்சினைகளுக்கு முடிவு காணவே முடியாது. அபிவிருத்திக்கு இவைகள் தடையாக இருக்கும்.

படித்த வாலிபர்கள் தொகை அதிகரித்து வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக் கொண்டுவரும் அதே நேரத்தில் வேலைக்குரிய வாய்ப்புக்கள் குறைந்து கொண்டு வருவதை நாம் அவதானிக்கவேண்டும். இந்தப் பிரச்னைகள் எந்த நாட்டிற்கும் பொதுவானவை.

நம்நாட்டின் எதிர்காலம் நன்றாக அமைவதற்கு எதிர்காலச் சிந்தனையுடன் தேசிய செல்வத்தை அபிவிருத்தி செய்வதற்கான அடிப்படைத் திட்டமொன்றை உடனடியாக வகுத்துக்கொள்ளவேண்டியது அவசியம்

கூட்டுறவு முறையிலான விவசாயப் பண்ணைகளையும் தொழில்துறைகளையும் அமைக்கவேண்டும். நவீன விவசாயத் தொழில்முறை, தொழில்நுட்பப் பயிற்சி ஆகியவற்றை இளைஞர்கள் மேற்கொள்ள வேண்டும். இவற்றுக்கெல்லாம் அடிப்படையில் மாற்றம் செய்தல்வேண்டும். ஒரு சுதந்திர நாட்டுக்கு ஏற்ற தேசிய கல்வித் திட்டமொன்றை ஆக்கவேண்டியது அத்தியாவசியம்

நமது தேசத்துக்கென்று தொடர்புகொள்ளவும் எமது இறக்குமதி ஏற்றுமதிகளைச் செய்யவும் சொந்தக் கப்பல் போக்குவரத்துக் கம்பனியை இலங்கை ஆக்கிக்கொள்ள வேண்டும். ஏற்றுமதி இறக்குமதிகள் அனைத்தையும் கடல் மூலம் வள்ளம் முதலியவற்றால் நடாததினால் பெரும்பயனும் இலாபமும் தொழில் வாய்ப்பும் ஏற்படும்.

### ஆங்கிலத்தின் அவசியம்

கோப்பாய் எம். பி. திரு. பாலசுந்தரம் பேசுகையில் கோப்பாய்த் தொகுதியில் இன்னுமோர் தொழில்நுட்பப் பயிற்சிக் கலாசாலையை நிறுவ அரசாங்கம் முயற்சி செய்வதாகவும் இதுவிஷயத்தில் தானும் சிரத்தை எடுத்துவருவதாகவும் ஆங்கிலத்தை இரண்டாவது கட்டாயபாடமாக அனைவரும் கற்கவேண்டுமெனவும் கூறினார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் சாரதாதேவி போன்ற பெண்மைக்கு இலக்கணமான மாதர்திலகங்கள் நம்நாட்டில் தோன்றவேண்டுமென்றும் சாதிப்பூசல்களைக் களைந்தெறிந்து நாட்டுக்குச் சேவைசெய்ய மாதர்கள் முன்வரவேண்டுமென்றும் பெண்கள் சிறுசிறு குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபட்டுப் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டுமென்றும் கூறினார்.

விழாவில் வேறும் பலர் பேசினர்.

## தற்காலிக ஹைகமிஷனராக குணவர்த்தன நியமனம்

கொழும்பு, புதன்

பாரிஸின் இலங்கை ஸ்தானிகராகக் கடமையாற்றிவரும் திரு. ஆர். எஸ். எஸ். குணவர்த்தன பிரிட்டனுக்கு இலங்கையின் தற்காலிக ஹைகமிஷனராகவும் நியமிக்கப்படுவார் எனத் தெரிகிறது.

ஹைகமிஷனர் பதவிக்கு நிரந்தரமாக ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை பாரிஸின் இலங்கை ஸ்தானிகராக்கடமையாற்றுவதோடு ஹைகமிஷனர் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வார்.

காலஞ்சென்ற திரு. குணசேன டி' சொய்ஸாவின் ஸ்தானத்தை திரு. குணவர்த்தன வகித்து வருவார்.

RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC RAY

பன்மடங்கு சிறந்த பாட்டரி இதுவே

பலமணித்தியால அதிக உத்தரவாத சேவை

யளிப்பதும் இதுவே







மொத்த விற்பனை விநியோகஸ்தர்கள்: மில்லர்ஸ் லிமிட்டெட் கொழும்பு.
எம். கே. எ. ஹமீது அன் கோ, குருனாகலை.
என். எச். குமாரசிங்க அன் கோ, காலி.
சூப்பர் ஹாட்வெயார் இரத்தினபுரி.

எ. ஏ. பகலராவல அன் பிரதர்ஸ், பதுளை
எஸ். கே. பீட்டர் அப்பு அன் பிரதர்ஸ் பதுளை.
எஸ். எ. செல்லையா அன் சன்ஸ், மட்டக்களப்பு,

முன்னெப்பொழுதையும் விட எவ்வளவோ முன்னேற்றம்!

RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

# புன்னாலைக்கட்டுவனில் மர்மத் திருட்டு

## கார் "போனற்றுள்" நகைகள் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், வியாழன்

புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த அற்பை என்னுமிடத்தில் நடைபெற்ற மர்மத் திருட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டவர்களான வல்லிபுரம் பொன்னுச்சாமி, சைமன் வியனகே, ராசு ஆகியோர் மல்லாகம் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் செவ்வாய்க்கிழமை ஆஜர் செய்யப்பட்டார்கள். இருவரையும் இம்மாதம் 31-ந் திகதி வரையும் ரிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்ரேட் திரு. டபிள்யூ. டி. தாமோதரம் உத்தரவிட்டார்.

அற்பையைச் சேர்ந்த சின்னப்பு வைத்திலிங்கம் வீட்டில் நகைகளும் ரொக்கமும் திருட்டுப் போனதையடுத்து பிரஸ்தாப நபர்கள் சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த சார்ஜண்ட் திரு. வீரவாகுவினால் யாழ்ப்பாணத்தில் வைத்து ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 'மோட்டார் கார்' பொலிஸ் பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ளது. அந்த மோட்டார் வண்டியின் 'பொனற்'றுக்குள் திருட்டுப் போன நகைகள் சில கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

---

## வைத்திய சாதனங்கள் பிரிட்டன் கொடுக்கும்

கொழும்பு, புதன்

பேராதனையில் கட்டப்படவிருக்கும் இரண்டாவது வைத்தியக் கல்லூரிக்கு வைத்திய சத்திரசிகிச்சைக்கான சாதனங்களைப் பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்க முன்வந்துள்ளது. இரண்டு லட்ச ரூபாய் பெறுமதியான சாதனங்களை பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கும்.

---

## பொய்ப்பிரசாரம்

### உதவிமந்திரி எச்சரிக்கை

குளியாப்பிட்டி, செவ்வாய்

அரசாங்கத்துக்கு எதிராக வேண்டுமென்றே செய்யப்படும் பொய்ப்பிரசாரங்கள் சம்பந்தமாக மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டுமென்று உதவி கல்வி மந்திரி திரு வி. டி. ஜி. கருணரத்தின அகுறுவாகல பாடசாலை கையளிப்பு - விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

எத்தனை இடையூறுகள் நேர்ந்தாலும் அரசாங்கம் தனது சோஷலிஸக் கொள்கையை நிறைவேற்றியேதீரும் என்று உதவி மந்திரி தெரிவித்தார்.

கல்வி இலாகா ஒன்றுதான் மேலதிக நேரவேலைக்குச் சம்பளம் கோராத உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரேயொரு அரசாங்க இலாகா என்று திரு. கருணரத்தின கூறினர்.

வாரியப்பொல எம். பி. யும் மற்றும் பலரும் பேசினர்.

---

## கோப்பாய் மாதர் சுற்றுப்பிரயாணம்

நீர்வேலி, புதன்

கோப்பாய் மாதர்சங்கம், நெசவு நிலையம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவிகள் கிளிநொச்சிப் பகுதியிலுள்ள விவசாயப் பண்ணைகளையும் கூட்டுறவுச் சங்கங்களையும் நேரில் பார்வையிடுவதற்காக ஒரு சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டார்கள்.

வலிகிழக்கு காரியாதிகாரி திரு. ஜே. ரி. சபாபதிப்பிள்ளை கிராமாபிவிருத்தி மேற்பார்வையாளர் திரு. கே. எஸ். முத்துவேற்பிள்ளை ஆகியோர் தலைமையில் சென்ற இப் பெண்கள் கிளிநொச்சியிலுள்ள பல்வேறு முயற்சித் திட்டங்களையும் பார்வையிட்டுத் திரும்பியிருக்கிறார்கள்.

---

## விமான சேவை ஒப்பந்தம்

புதுடில்லி, அக். 18

மேற்கு ஜெர்மனியும் இந்தியாவும் விமானப் போக்குவரத்து ஒப்பந்தமொன்றில் நேற்றுக் கைச்சாத்திட்டன.

---

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

புதன் 18-10-61

வியாழன் 19-10-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 பான்ட் வாத்திய இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப் பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 பேச்சு, 7-15 நேயர்விருப்பம், 7-45 'மனம் மாறிய செல்வன்' - நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 தாளவாத்தியக் கச்சேரி, 9-45 தேர்ந்தஇசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 பி. ஆர். திலகம் - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பி. ஆர். திலகம் - பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 பி. சவிரிமுத்து - பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி தஞ்சாவூர் எம். தியாகராஜன் - பாட்டு, 8-30 டெல்லி அஞ்சல், 8-40 திரைப்பட இசை, 9-15 சுபத்த சங்கீதம், 9-30 அகிலபாரத நாடக நிகழ்ச்சி.

---

## மாணவர் சுற்றுப்பிரயாணம்

யாழ்ப்பாணம், வியாழன்

சென்ற திங்கட்கிழமை சிவியாதெரு ஆனந்த வித்தியாசாலையைச் சேர்ந்த எழுபது உயர்வகுப்பு மாணவர்கள் அடங்கிய கோஷ்டியொன்று ஆசிரியர்கள் சிலருடன் கல்விச் சுற்றுப்பிரயாணமொன்றை மேற்கொண்டது. அவர்கள் இரணைமடுக்குளம், முறிகண்டி விநாயகர் ஆலயம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளத்துடன் சரித்திரப் பிரசித்திவாய்ந்த ஏனைய இடங்களையும் பார்வையிட்டனர்.

விவசாயப்பகுதி உதவி டைரக்டர் திரு. ஆறுமுகம் இரணைமடுவில் மாணவர்க்கு அரியதொரு சொற்பொழிவாற்றினர்.

---

## பெற்றோர் ஆசிரியர் சங்கம்

மன்னார், திங்கள்

"பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் நெருங்கிய தொடர்பிருந்தாற்றான் அவர்கள் ஒழுக்கம் கல்வி முதலியன சிறப்படையும். எனவே பெற்றோரும் ஆசிரியரோடு ஒத்துழைக்கவேண்டும்" என்று றோ. க. தலைமை ஆசிரியர் திரு. ஞா. அந்தோனிப்பிள்ளை அண்மையில் கரிசலில் நடத்திய பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசியபோது குறிப்பிட்டார்.

உத்தியோகத்தர் தெரிவில் திரு. ஞா. அந்தோனிப்பிள்ளை தலைவராகவும், திரு. கவுசு காரியதரிசியாகவும், பொருளாளராக திரு. அசனுமரைக்காரும், ஆறு பேர்களைக் கொண்ட நிர்வாகசபையினரும் தெரியப்பட்டனர்.


# ஒரு கரண்டிபாலின் தரத்தை எந்தத் தேநீரும் மீறமுடியாது




*இலங்கைத் தேநீரை அறியும்!*

இலங்கை தேநீரை அறியும்! இது "மில்க்மெயிட்"டையும் அறியும்— இந்தச் சிறந்த பால தேநீர் பருகுவதில் இன்பத்தையும் அதிகரிக்கும். உங்களுக்குச் சிறந்த—மிகவும் சுத்தமான பால் எனத்தெரிவு செய்யப்பட்டு நெஸில்ஸ் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்டது. இது மிகவும் சிறந்த ரசமும் பணத்துக்கேற்ற நிறைந்த பெறுமதியும் கொண்டது. எப்பொழும் "மில்க்மெயிட்"பாலையே கேட்டுவாங்குங்கள்.

தேநீர் தயாரிப்பதற்கான ஐந்து பொன்னான விதிகள்:



- பக்கெட்டில் அடைக்கப்பட்ட திறமான தேயிலை
- உஷ்ண தேநீர்ப் பானை
- ஒருவருக்கு ஒரு கரண்டிப் பால். பானைக்கு ஒன்று
- சுத்தமாக கொதித்த வெந்நீர்
- 3-4 நிமிடங்களுக்கு ஊற விடுதல்.

ஆனால்: "மில்க்மெயிட்"பாலை எப்போதும் மறவாதீர்கள்.




## "மில்க்மெயிட் பால்" — சிறந்த பால்

## இலட்சுமித் தோட்டம்

# இன்று மீண்டும் பகிரங்க விசாரணை

கொழும்பு, புதன்

இலட்சுமித்தோட்ட விசாரணை நாளை வியாழக்கிழமை மீண்டும் பகிரங்கமாக நடைபெறவிருக்கிறது.

இலட்சுமித் தோட்டத்துரை திரு. ஹார்லியை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் ஆஜராகும் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் 17 தினங்கள் குறுக்கு விசாரணை செய்தார். ஹார்லியின் குறுக்குவிசாரணை இரகசியமாகவே நடைபெற்று வந்தது.

வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் இ. தொ. காங்கிரஸ் சாட்சிகள் சாட்சிமளிப்பார்கள். திரு. ஹார்லி மீண்டும் இம்மாதம் 23-ந்திகதி குறுக்கு விசாரணை செய்யப்படுவார். இதுவும் அந்தரங்கத்தில்தான் நடைபெறும். செப்டம்பர் மாதம் 13-ந் திகதி திரு. ஹார்லியைக் குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பிக்கப்பட்டது.

---

## வெள்ளப் பெருக்கில் 333 பேர் பலி

பாட்னு, புதன்

மாங்கீர், பகல்பூர், பாட்னு, கயா ஆகிய இடங்களில் கடந்த வெள்ளப்பெருக்கில் 333பேரும் 32430 கால்நடைகளும்பலியாகியிருப்பதாகத் தெரிகிறது

150 பேர் காணப்படவில்லை எனத் தெரிகிறது.

அக்டோபர் 1-ம் திகதிவரை கிடைத்த தகவலின்படி மாங்கீர் ஜில்லாவில் 80,000 வீடுகளும், பாட்னுவில் 17,492 வீடுகளும், கயாவில் 37,204 வீடுகளும், பகல்பூரில் 23,319 வீடுகளும் சேதத்துக்குள்ளாயின.

மாங்கீரில் 1850, பகல்பூரில் 403, பாட்னுவில் 941, கயாவில் 91 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளனவாம்.

## தென் வியட்நாமில் அவசரகாலநிலைமை

சைகோன், அக். 18

தென் வியட்நாம் முழுவதிலும் அவசரகாலநிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

---

## பால்பவுடர் உதவி

புதுடில்லி, அக். 18

இந்தியாவில் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவியாக 25 லட்சம் ருத்தல் பால் பவுடரை அமெரிக்கா வழங்கும்.

## சிரியாவுக்கு இந்தியா அங்கீகாரம்

புதுடில்லி, அக். 18

சிரியாவை இந்திய அரசாங்கம் அங்கீகரிப்பதாக ஒரு வாரம் அல்லது பத்து நாட்களில் அறிவிக்கப்படும் என்று நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

---

## சென்ற வருடம் வேலையற்றோர் தொகை அதிகம்

கொழும்பு, புதன்

சென்றவருடம் 1,33,430பேர் வேலையற்றிருந்தார்களென்றும் சென்றவருடத்தில்தான் அதிகமானோர் வேலையற்றிருந்திருக்கிருர்களென்றும் 1960ம் ஆண்டுக்கான தொழில்கமிஷனரின் நிர்வாக அறிக்கை தெரிவிக்கிறது.

1948-ம் வருடம் 1,22,592 பேர் வேலையற்றிருந்தார்கள்.


சினிமாஸ் திரைகளில் வெகுவிரைவில் எதிர்பாருங்கள்!

மனோஹர், தேவிகா நடித்த

**பாஞ்சாலி**

கிங்ஸ்லி (கொழும்பு)



வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த

**பாவ மன்னிப்பு**

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30 க்கும் இரவு 9-30 க்கும்
சனி, ஞாயிறு மெட்னி மாலை 2-30-க்கு
கிறிஸ்டியானு-மாட்டெல் கர்லோஸ்பயனு நடித்த

**ஆதாமும் ஏவாளும்** (ஆங்கிலம்)

தினசரி மாலை 4-15 மணிக்கும்
சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும்

**றுத்தின் சீவிய சரித்திரம்** (ஆங்கிலம்)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## துறைமுகத்தில் நெருக்கடி

கொழும்பு, புதன்

கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியில் உணவுக் கப்பல்கள் அதிகமாகத் தங்கி நெருக்கடியை உண்டுபண்ணுவதால் மற்றத் துறைமுகங்களுக்கு இந்தக் கப்பல்களில் அனுப்பக்கூடிய அளவு கப்பல்களை அனுப்ப உத்தரவிடுமாறு தற்காலிக உணவுமந்திரி திரு. டி. எஸ். குணசேகரா உணவு கமிஷனர் திரு. ஆர். எல். ஆர்னேல்டாவைக் கேட்டுள்ளார்.

இன்றுகாலை துறைமுகத்துக்கு வெளியே 12 கப்பல்கள் தங்கிநின்றன.

---

## கொழும்பில் அம்மை தடுப்பு ஊசி

கொழும்பு, புதன்

கொழும்பிலுள்ள பொது மக்களை விரைவில் அம்மை தடுப்பு ஊசி போட்டுக்கொள்ளுமாறு கொழும்பு வைத்திய அதிகாரி டாக்டர் வி. நடராஜா கேட்டுள்ளார்.

இன்னும் இந்த நோய் கொழும்பு நகரில் பரவத்தொடங்கவில்லை எனினும் எச்சரிக்கையாக இருப்பதற்காக இந்த ஊசி போட்டுக்கொள்வது நல்லது என டாக்டர் நடராஜா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் சுகாதார இலாகா தடுப்பூசிபோடும் 12 நிலையங்களை ஆரம்பித்துள்ளார்கள். அதிகமானோர் இங்கு சென்று தடுப்புஊசி போட்டுக்கொள்வார்கள் எனத் தாம் நம்புவதாக டாக்டர் நடராஜா கூறினர்.

---

## காங்கோவுக்கு விமானம்

ஆக்ரா, செவ்வாய்

மேலும் இரு கான்பராஜெட் விமானங்கள் இங்கிருந்து காங்கோவுக்கு இன்று புறப்பட்டுச் சென்றன. அங்கு அக். 12 லிருந்து இந்திய விமானப் படை விமானங்களுடன் இந்த இரண்டு விமானங்களும் சேர்ந்துகொள்ளும்.

---

## லஞ்சக் குற்றவாளிகள் டட்லியின் மசோதா

கொழும்பு, புதன்

தல்கொட பிட்டியா லஞ்சக் கமிஷனுல் குற்றவாளிகளாகக் கண்டவர்களுக்கு சமூக உரிமைகள் இருக்கக் கூடாது என எதிர்க் கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா கொண்டுவர இருக்கும் தனிப்பட்ட அங்கத்தவர் மசோதா இம் மாதம் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும்.

---

## இந்தியாவுக்கு எண்ணெய்

புதுடில்லி, அக். 17

அரசாங்கத்துக்குச் சொந்தமான இந்திய எண்ணெய்க் கம்பனிக்காக மொத்தம் 60 லட்சம் கலன் ரஷ்ய எண்ணெய்ப் பண்டங்களடங்கிய கப்பல்கள் இம் மாதம் இந்தியாவுக்கு வரும் என்று தெரிகிறது. இதில் 46 லட்சம் கலன் அதிவேக டீசல் எண்ணெயாகும்.

# பள்ளிக்கூடங்கள் பிள்ளைகளை நல்ல மனிதர்களாக்க வேண்டும்

### மகாஜனக் கல்லூரியில் உதவி வித்தியாதிபதி உரை

தெல்லிப்பழை, புதன்

"பள்ளிக்கூடங்கள் வெறும் பள்ளிக்கூடங்களாக மட்டும் இருந்துவிடக்கூடாது. பிள்ளைகள் நல்ல மனிதர்களாக வளர்ந்து வருவதற்கு அவை வழி வகுக்கும் சாதனங்களாகவும் அமையவேண்டும்." இவ்வாறு உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்ற நவராத்திரி விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

பள்ளிக்கூடங்களை அரசாங்கம் பொறுப்பேற்றதால்தேசிய தேவைகளை நிறைவேற்றும் இடங்களாகியுள்ளன. தேசிய கல்விக் கமிஷன் நாட்டின் தேவைகளை ஆராய்ந்து வருகிறது. தேவைகள் எவையென்று கண்டுபிடிக்கப்பட்டதும் அவைக்கேற்ப இப்போதுள்ள பள்ளிக்கூடங்கள் நடாத்தப்பட்டு வரும். எப்பகுதிகளிலாவது புதிய பள்ளிக்கூடங்கள் தேவைப்பட்டால் அவை அமைக்கப்படும்.

அரசாங்கம் பள்ளிக்கூடங்களை எடுத்துவிட்டதால், பள்ளிக்கூடங்கள் பற்றி தாம் எதுவித அக்கறையும் செலுத்த வேண்டியதில்லை என்று மக்கள் நினைப்பது வருத்தத்துக்குரியது. தம்மைத்தாமே பார்த்துக்கொள்பவர்களுக்குத்தான் கடவுளும் உதவிசெய்வார். பெற்றோர் யாவரும் ஒத்துழைத்துப் பள்ளிக்கூடங்களைக் கவனித்துவந்தால்தான் அரசாங்கம் பள்ளிக்கூடத்தை ஏற்று நடத்தலாம்

அரசாங்கம் பள்ளிக்கூடங்களை ஏற்றிருப்பதை மகாஜனக்கல்லூரி தகுந்தமுறையில் ஏற்றுள்ளது.

பொருளாதாரம் குன்றிய நிலையில் நாம் பணத்தில் கவனமாக இருக்கவேண்டியது அவசியம். அத்தோடு எமது வாலிபர்களுக்குப் போதுமான நல்ல வேலை தேடிக்கொடுப்பதும் எமது கடமையாகும். கொண்டாட்டங்கள் மக்களுக்கு அவசியம் தேவையானவை அதன் காரணமாகவே மக்கள் சினிமாவுக்குச் செல்கிருர்கள். சினிமா ஒன்றுதான் எமக்குக் கொண்டாட்டமாக இருந்துவருகிறது. இதன் பரிதாப விளைவு என்னவெனில் எமது நாட்டுப் பணம் ஹாலிவூட்டுக்கும் இந்தியாவுக்கும் தினமும் போகிறது. இதற்கு ஒரேயொரு வழி பள்ளிக்கூடங்களில் நுண்கலைத் துறையில் அதிகம் ஊக்கமளிப்பதேயாகும். பள்ளிக்கூடங்களில் நுண்கலைகள் பயிற்றப்பட்டு அதன்விளைவாக நாட்டில் பல கலைவல்லுனர்கள் தோன்றவேண்டும். பெற்றோரும் பொதுமக்களும் ஊக்கமெடுத்தால் இதில் வெற்றி காணலாம். எமது சொந்த கலைவல்லுனர்களின் முயற்சிகளை நாம் கொண்டாடவேண்டும். நடிக நடிகையர்கள், நாட்டியம் தெரிந்தோர், இசையாளர்கள் அனைவரையும் இங்குதானே கண்டுகொள்ளலாம். இந்தப் புகழை உண்டாக்க நாம் நுண்கலைகளுக்கு ஊக்கமும் உதவியுமளிக்கவேண்டும்.

நவராத்திரிவிழாக் காலம் தான் நுண்கலைகளுக்கென ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது. எனவே பள்ளிக்கூடங்களில் நவராத்திரி விழாக்கொண்டாடுவது மிகவும் பொருத்தமானதாகும். எமது பிள்ளைகளே ஓவியர்களும் நடிகர்களுமாவர். அவர்களுக்கு ஆர்வம் உண்டாக்கக்கூடிய வகையில் இக் கொண்டாட்டங்கள் கொண்டாடப்படல்வேண்டும்.

# மூட நம்பிக்கைகளால் வீடமைப்பில் தாமதம்

கொழும்பு, புதன்

தேசிய வீடமைப்பு இலாகாவிடம் கடன் பணம் பெற்றுக் கட்டப்படும் வீடுகளின் கட்டட வேலைகள் முடிவதில் தாமதம் ஏற்படுகின்றது. மூடக் கொள்கைகளும் பழக்கவழக்கங்களுமே வீடு கட்டும் வேலைகள் தாமதமாகுவதற்குக் காரணம் எனக் கருதப்படுகிறது.

வீடமைப்பு இலாகாவின் அங்கீகாரம் பெற்ற வீடுகள் பல கட்டி முடியாததற்கு மூடநம்பிக்கைகள்தான் காரணம் என்று வீடமைப்பு இலாகாவின் அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது.

வீடு கட்ட ஆரம்பமாகும் நேர காலத்தை நிர்ணயிப்பதற்கு சாத்திரிமார்களின் ஆலோசனை கோரப்படுவது பலரின் வழக்கமாக இருக்கிறது என வீடமைப்பு இலாகா அதிகாரியொருவர் கூறியுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

"ஒரு சில மாதங்களில் மட்டும்தான் வீட்டுக்கு அஸ்திவாரக் கல் நாட்டிக் கொள்ளலாமாம்; வீடு கட்டுவோரின் மனைவிமார் கர்ப்பவதிகளாக இருக்கும் சமயங்களில் சிலர் அஸ்திவாரக் கல் நாட்டுவதில்லையாம். இதனுலும் வீடு கட்டுவதில் தாமதம் ஏற்படுகிறது.

"யாழ்ப்பாணத்தில் ஒரு உதாரணம்-வீடு கட்டத்தொடங்கிய ஒருவரின் மனைவி கர்ப்பவதியாகியிருந்ததனுல் அந்த வீடு ஒரு வருடமாகக் கட்டுங் வேலை எதுவுமின்றிக் கிடந்தது. அதே வீட்டின் கட்டு வேலைகள், குறிக்கப்பட்ட பெண் இரண்டாம்தடவை கர்ப்பமுற்றிருந்த போதும் இன்னுமொரு வருட காலம் தாமதிக்கப்பட்டது."

இப்படியான நம்பிக்கைகளினுல் வீடமைப்பு வேலைகள் துரிதமாக நடப்பதில்லை என அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

## பாரிஸில் வேலை நிறுத்தம்

பாரிஸ், அக். 18

பாரிஸில் இன்று மின்சார, காஸ் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்ததனுல் பாரிஸ் வீதிகளில் போக்குவரத்து சேவைகள் ஸ்தம்பித்தன. பொது மக்கள் தமது அலுவல்களை கார்கள் மூலம் சென்று கவனிக்கவேண்டியிருந்தது.

வாழ்க்கைச் செலவைக் குறைக்குமாறு கோரியே தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர்.

வேலை நிறுத்தம், எதிர்பார்த்ததை விட அதிக வெற்றியளித்ததாக வர்த்தக சங்கத் தலைவர்கள் தெரிவித்தார்கள்.

---

புதுடில்லி, அக். 17

பிரதம மந்திரியின் பார்லிமெண்டரி காரியதரிசி சதத் அலிகான் ஈராக்கில் இந்திய தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் டிசம்பரில் பதவி ஏற்பார்.